விலை ரூபா: 7.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | புரட்டாதி 22 | வெள்ளிக்கிழமை | (08.10.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 294

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சீமெந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## தமிழ்ச்செல்வன் குழுவினர் ஒக்கியாவிற்குப் பயணம்

(ஜெனிவா)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் சுவிஸிலிருந்து ஒக்கியாவிற்கு சென்றுள்ளனர்.

சுவிஸ் நேரப்படி நேற்றிரவு 8மணிக்கு ஜெனிவா விமானநிலையத்திலிருந்து ஒக்கியாவிற்கு சென்றனர்.

அங்குசெல்லும் இக்குழுவினர் முரண்பாடுகளை நீக்கும் அமைப்புடன் நடைபெறும் இரண்டு நாள் கருத்தரங்கில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்கருத்தரங்கு நிறைவு பெற்றதும் அங்கிருந்து மீண்டும் ஜேர்மனிக்குச் செல்லவுள்ளனர்.

இதேவேளை சுவிஸ்லாந்தில் தங்கியுள்ள வடக்கு கிழக்கு மனித உரிமைகள் அமைப்பின் பிரதிநிதிகள் இன்றும் நாளையும் அங்கு தமது அமைப்பின் செயற்பாடுகள் தொடர்பாக கருத்து பரிமாற்றலில் ஈடுபடவுள்ளனர். (ச)

## பௌத்த பீடாதிபதிகளுடன்பேச கூட்டமைப்பு எம்.பிக்கள் முடிபு

### திங்களன்று சந்திக்க ஏற்பாடு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை மல்வத்த அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

மல்வத்த பீடாதிபதி திப்பட்டுவாவே சிறி சித்தார்த்த சுமங்கல தேரரையும் அதனைத் தொடர்ந்து அஸ்கிரிய பீடாதிபதி உடுகம புத்தரகித்த தேரரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகள் மற்றும் விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் நியாயத்தன்மை குறித்து கூட்டமைப்பினர் பௌத்தபீடாதிபதிகள் இருவருக்கும் விளக்கிக் கூறவுள்ளனர்.

தடைப்பட்டுபோயுள்ள பேச்சுவார்த்தையினை மீள ஆரம்பிக்கவேண்டியதன் அவ

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வாக்களிப்பில் அடையாள அட்டையை கட்டாயமாக்கும்

# ஆளும் கூட்டணி அரசின் சட்ட மூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேறியது

## பெற்றோல் நிலையத்தில் மோ. சைக்கிள் தீப்பற்றியது

(யாழ்ப்பாணம்)

பெற்றோல் நிரப்பிக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் திடீரென தீப்பற்றி எரிந்த சம்பவம் ஒன்று நேற்று மாலை யாழ். நகரில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் வின்சர் தியேட்டர் சந்தியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இசற் கோர் புள்ளிகள் டிசம்பர் 10 ல் வெளியாகும்

(கொழும்பு)

2004 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உ/த பரீட்சை பெறுபேறுகளிற்கு அமைய இசற் கோர் புள்ளிகளை எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி வெளியிடப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்த பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு குடும்பஸ்தரொருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். முத்துக்கல் கிராமத்தில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அக் கிராமத்தைச் சேர்ந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய பொலிஸ்மா அதிபர் பிரதமருடன் சந்திப்பு

(கொழும்பு)

புதிய பொலிஸ்மா அதிபராகப் பதவியேற்றுள்ள சந்திரா பெர்ணான்டோ நேற்றுப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையும் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

சந்திரா பெர்ணான்டோ புதிய பொலிஸ்மா அதிபராகப் பதவியேற்ற பின் முதற் தடவை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. ஆதரவு; கூட்டமைப்பு நடுநிலை

(நமது நிருபர்)

**அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பொதுத் தேர்தல்களின்போது தேசிய அடையாள அட்டையை கட்டாயமாக்கும் சட்டமூலம் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பூரண ஆதரவுடன் வாக்கெடுப்பு எதுவுமின்றி பாராளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது.**

தேர்தல் வாக்கெடுப்பின் போது அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் அரசாங்கத்தின் சட்டமூலம் தொடர்பாக கட்சித் தலைவர்கள் நேற்று முன்தினம் பாராளுமன்ற சபாநாயகர் லொக்குபண்டாரவின் தலைமையில் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூடி ஆராய்ந்தனர்.

இதன்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியன சமர்ப்பித்திருந்த திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்து அத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுவார்த்தையை அரசு ஆரம்பிக்க முடியாமைக்கு என்ன காரணம்

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கேள்வி

(கொழும்பு)

ஒஸ்லோவிலும் டோக்கியோவிலும் செய்துகொள்ளப்பட்ட பிரகடனத்துக்கு அமைவாக நாட்டில் இரு தசாப்த காலமாக நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என ஜனாதிபதி தெரிவித்திருப்பது ஐக்கிய தேசியக் கட்சி வரவேற்கின்றது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சமாதானத்திற்கான தேசிய ஆலோசனைச் சபையில் ஜனாதிபதி தெரிவித்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியர்களுக்கு 2005 ல் சம்பள உயர்வு

### அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசினால் எதிர்வரும் நவம்பர் மாதம் 18ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய வரவுசெலவு திட்டத்தில் அரச ஊழியர்கள் அனைவருக்கும் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது என வர்த்தக வாணிப நுகர்வோர் அலுவல்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மக்களுக்கு அளித்த வாக்குறுதியின் பிரகாரம் கடந்த ஏப்ரல் மாதம் முதல் அரச ஊழியர்களுக்கு ஏன் சம்பள அதிகரிப்பு வழங்கப்படவில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுவிஸ்குழு இன்று யாழ். வருகிறது

(யாழ்ப்பாணம்)

சுவிஸ் நாட்டைச் சேர்ந்த மூன்று பேர் அடங்கிய சமாதானக் குழுவொன்று இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளது.

யாழ். வரும் இக் குழுவினர் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

அத்துடன் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களுக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிடவுள்ளனர். (த-121)

## ரவூப் ஹக்கீமுடன் இன்று கூட்டமைப்பு பேச்சு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை இன்று காலை சந்தித்துப் பேசவுள்ளனர்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இன்று காலை 10.30 மணியளவில் இடம்பெறும் இச் சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலைபரம், எதிர்காலத்தில் சமாதான முயற்சியை எவ்வாறு நகர்த்திச் செல்லுதல், இதில் முஸ்லிம் காங்கிரஸின் பங்களிப்பு என்பன குறித்து விரிவாக ஆராயப்படவிருக்கின்றது. (த)

## ஹெல உறுமய எம்.பி. ராஜினாமா

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் வண. கொலன்னாவ சுமங்கல தேரர் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்யவுள்ளார். தனது இராஜினாமாக் கடிதத்தை பாராளுமன்ற செயலாளர் நாயகம் பிரியாணி விஜயசேகரவிடம் இன்று கையளிக்கவுள்ளார். தான் தனது முழுக் கவனத்தையும் மத விடயங்களில் செலவிடவுள்ளதாகவும் தனது நேரத்தை பாராளுமன்றத்தினுள் வீணாக்க விரும்பவில்லை எனவும் மத விடயங்களை புறக்கணிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார். இவரின் இடத்திற்கு வண. அளவ்வை நந்தா லோக தேரர் நியமிக்கப்பட்டுள்ளார். (த-06)

# இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் குறித்து அமெ. உயரதிகாரிகளுக்கு எரிக் விளக்கம்

(கொழும்பு)

நோர்வேயின் விஷேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஜெனிவாவில் விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவினருடன் நடாத்திய பேச்சுக்களின் விபரங்கள் குறித்து அமெரிக்காவின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு விளக்கிக் கூறியுள்ளார்.

இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்கள், சமாதான முன்னெடுப்புக்களில் ஏற்பட்டுள்ள இடைஞ்சல்கள், அதனை மீள ஆரம்பிப்பதில் உள்ள சிக்கல்கள் மற்றும் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் அமெரிக்காவின் பங்களிப்புக்கள் ஆகியன உட்பட பலதரப்பட்ட முக்கிய விடயங்கள் குறித்தும் அமெரிக்க உயர் அதிகாரிகளுடன் எரிக் சொல்ஹெய்ம் கலந்துரையாடியதாக நோர்வேத் தூதரகம் தகவல் வெளியிட்டுள்ளது.

அத்துடன், இது விடயம் குறித்து அமெரிக்காவின் தெற்காசியப் பிராந்திய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலரையும் நோர்வேயின் விஷேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சந்தித்துக் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற)



யாழ்ப்பாணம் சமுர்த்தி மகாசங்கத் திறப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு.ஆ.சிவசுவாமி உரையாற்றுவதையும், பிரதேச செயலர், முகாமைத்துவ பணிப்பாளர், சமூக சேவை உத்தியோகத்தர், மகாசங கக் கட்டுப்பாட்டுசபைத் தலைவர் திரு.க.தம்பிராசா மற்றும் உறுப பினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம.



நயினாதீவு சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சுவிஸ் ஒன்றியச் செயலாளர் திரு.சு.உதயபாரதிலிங்கம், அண்மையில் உள்ள முருகன் ஆலயத்தில் வைத்து நிலையத் தலைவரும், அஞ் சலதிபரும், சமாதான நீதிவானுமாகிய திரு.நா.க.குமாரசூரியரால் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும், அருகில் நிலையச் செயலாளர் திரு.ந.சாந்தரூபன், நிலையப் போசகர் திரு.க.சிவனேஸ் வரன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## ஒரே பிரசவத்தில் ஐந்து குழந்தைகள்

(கொழும்பு)

பேராதனை பிலிமத்தலாவையைச் சேர்ந்த பெண்ணொருவர் ஒரே பிரசவத்தில் 5 குழந்தைகளை பெற்றெடுத்த சம்பவமொன்று நேற்று முன்தினம் கொழும்பு வைத்திய சாலையில் இடம்பெற்றுள்ளது.

இந்த மகப்பேறு சத்திர சிகிச்சை முலமே இடம்பெற்றுள்ளது. மூன்று பெண்குழந்தைகளும் இரண்டு ஆண் குழந்தைகளும் இத்தாய்க்குக் கிடைத்துள்ளன. தாயும் சேய்களும் தேகாரோக்கியத்துடன் இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

பிரசவத்திற்கு முன் அவரைப் பரிசோதித்தபோது நான்கு குழந்தைகளே தென்பட்டதாகவும், பிரசவத்தின் போது ஐந்து குழந்தைகள் பிறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சில மாதங்களுக்கு முன்னர் பதுளை பெண்ணொருவருக்கு மூன்று குழந்தைகள் பிறந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-8)

## அமெரிக்க வதிவிட வீஸாவிற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 2006 ஆம் ஆண்டிற்கான அமெரிக்க லொத்தர் மூலமான வதிவிட வீஸாவிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் யாவும் இணையத்தளம் மூலமாக மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும். அடுத்தமாதம் 5 ஆம் திகதி முதல் 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதிவரை இவ்விண்ணப்பங்கள் பதிவு செய்யப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது பெயர், பிறந்த திகதி, விண்ணப்பிக்கும் நாடு போன்ற விபரங்களை **W.W.W.dvlottery.state.gov** என்ற இணையத்தள முகவரிக்கு மின்னஞ்சல் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற-7)

## ஆயுதமுனையில் கொள்ளை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு முகத்துவாரத்தில் நேற்று முன்தினம் ஆயுத முனையில் வீடொன்றில் ரூபா 30 ஆயிரம் ரொக்கப்பணம் உட்பட ரூபா 47 ஆயிரம் பெறுமதியான உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

லாசறு மரியசெல்வம் என்பவரின் வீட்டில் இந்தக் கொள்ளை இடம் பெற்றுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கைக்குண்டு மற்றும் கைத்துப்பாக்கியுடன் வீட்டிற்கு வந்த 3 இனந்தெரியாத நபர்கள் கையடக்கத் தொலைபேசியொன்றுடன் குறிப்பிட்ட ரொக்கத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## 9 அடி நீளமான வெங்கணாந்தி

(கல்வயல்)

மட்டுவிலில் உள்ள வேவில் கிராமத்தில் கடந்த திங்கட்கிழமை 9 அடி நீளமான வெங்கணாந்திப் பாம்பு ஒன்று உயிருடன் பிடிக்கப்பட்டது.

இவ்வாறு பிடிக்கப்பட்ட பாம்பு பின்னர் மருத்துவத் தேவைக்காகப பயன்படுத்தப்பட்டது. (ப-36)

## சனசமூக நிலையங்களுக்கு அதிகாரிகள் விஜயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் எல்லைக்குட்பட்ட 21 சனசமூக நிலையங்களிற்கு நகர சபை அதிகாரிகள் நேரில் சென்று நிலைமைகளை ஆராயவுள்ளனர்.

எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.00 மணியில் இருந்து பி.ப.2.00 மணிவரை இவ் அதிகாரிகள் சனசமூக நிலையங்களிற்கு நேரில் செல்லவுள்ளனர்.

அன்றைய தினம் சம்பந்தப்பட்ட சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் தங்களது சனசமூக நிலையங்களிற்குரிய இடாப்புக்கள், கோவைகளை ஆயத்தமாக வைத்திருக்கும்படி நகரசபையின் செயலாளர் திருமதி குணமணி தேவி ஆறுமுகம் கேட்டுள்ளார். (ப-7,127)

## திருட்டுச் சம்பவங்கள் அதிகரிக்கின்றன

(கல்வயல்)

மட்டுவில் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

அண்மைக் காலமாக அதிகரித்துவரும் திருட்டுச் சம்பவங்களால் மக்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. (ப-36)

## கருத்தரங்கும் செயலமர்வும்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவில் இயங்கும் இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு நடாத்தப்படும் கருத்தரங்கும் செயலமர்வும் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் பி.ப.5.30 மணிவரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன. (ற)

## காஞ்சிரங்குடா படுகொலை நினைவுநாள் நாளை அனுஷ்டிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த 2002ஆம் ஆண்டு ஒக்டோபர் 10ஆம் திகதி நீதி கேட்டுப் போராடி காஞ்சிரங்குடாவில் மரணித்த தமிழீழ வீரமறவர்களின் 2ஆவது ஆண்டு நிறைவு விழாவும், நினைவு கூரும் நாட்டுப்பற்றாளர் நிகழ்வும் நாளை சனிக்கிழமை காஞ்சிரங்குடா நாட்டுப்பற்றாளர் நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், உடும்பன் குளக்கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலாகரன் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் உட்பட ஏனைய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல முக்கியஸ்தர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற)

## முடிவுத்திகதி

(இணுவில்)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்கு 2005 ஆம் ஆண்டில் மட்டுமே தோற்றுவோர் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை தமது விண்ணப்பங்களை அனுப்பலாம் என இலங்கை பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கான சுற்று நிருபமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ப-122)


வடக்கு – கிழக்கு மாகாண கல்வி,
பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
இளைஞர் விவகார அமைச்சு நடாத்தும்

**தமிழ் இலக்கியப் பெருவிழா –2004**

காலம் :- ஒக்டோபர் 9,10,11 ஆம் திகதிகள்
இடம் :- யாழ். இந்து மகளிர் கல்லூரி
✳ தினமும் காலை 9.00மணி தொடக்கம் 1.00 மணிவரை ஆய்வரங்கு
✳ தினமும் மாலை 5.00 மணி தொடக்கம் கலை நிகழ்வுகள்

**இலக்கிய விழாவின் முக்கிய நிகழ்வுகள்**

★ பண்பாட்டு ஊர்வலம்
★ சுழலும் சொற்போர்
★ நூல் வெளியீடு
★ ஆய்வரங்கு
★ கவியரங்கம்
★ ஆவண ஒளிப்பேழை வெளியீடு
(பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் பற்றியது)
★ இலக்கிய விருது வழங்கல் - 2003
★ ஆளுநர் விருது வழங்கல்
★ நாடக, நாட்டிய, கூத்து நிகழ்ச்சிகள்

(பண்பாட்டு ஊர்வலம் நல்லூர் கந்த சுவாமி கோவிலிலிருந்து ஆரம்பமாகி அரசடி வீதி வழியாக கந்தர்மடம் சந்தியை அடைந்து பின்னர் யாழ். இந்துமகளிர் கல்லூரியைச் சென்றடையும்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை,
இளைஞர் விவகார அமைச்சு
வடக்கு-கிழக்கு மாகாணம்
திருகோணமலை.

(C-611)

# பறவைக் காய்ச்சலின் எதிரொலி
# தாய்லாந்து பிரதமர் சீற்றத்தால் இரு அமைச்சர்களின் பதவி பறிமுதல்

(பாங்காக்)

பறவைக் காய்ச்சலை கட்டுப்படுத்த முடியாமல் திணறும் தமது அமைச்சர்கள் மீதும் அதிகாரிகள் மீதும் தாய்லாந்து பிரதமர் தக்சின் ஷினவக்ரா கடும் நடவடிக்கை எடுத்துள்ளார். அடி [illegible] அமைச்சர்கள் இருவரின் பத[illegible]றிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் பறவைக்காய்ச்சல் பெரும் அச்சுறுத்தலாகவுள்ளது. அந்நாட்டின் தென் பகுதியில் முஸ்லிம் பெருமளவில் வசித்து வருகின்றனர். அங்கு கடந்த ஜனவரி மாதத்திலிருந்து இதுவரை 11பேர் பறவைக் காய்சசலுக்கு பலியாகியுள்ளனர். இது பிரதமர் ஷினவத்தா தலைமையிலான அரசுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. மேலும் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் தாய்லாந்தில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்கு இன்னும் சிலமாதங்களே இருப்பதால் பிரதமர் தக்சின் ஷினவத்ராவுக் இந்த விசயம் பெரும் தலைவலியாகவுள்ளது.


ப[illegible]வைக் காய்ச்சலை கட்டுப் படுத்த பல்வேறு கடும் நடவடிக்கைகள் எடுத்தும் பயன் தரவில்லை. இதனால் அப்பகுதி மக்களிடம் அதிருப்தி தலைதூக்கியுள்ளது. இந் நிலையில் தமது அமைச்சரவையில் விவசாய அமைச்சராக இருந்த சோம்சக் தெப்சுதினையும், பாதுகாப்பு அமைச்சராக இருந்த செட்டா தனனரோவையும் அவர் திடீரென நீக்கியுள்ளார்.

இவர்களது நீக்கத்திற்குக் காரணம் என்ன வென்று வெளிப் படையாக தெரிவிக்கவில்லை. இருப்பினும், பறவைக் [illegible]ச்ச[illegible] கட்டுப்ப டுத்துவதில் அவர்கள் தவிரம் காட்டாமல் இருந்ததால், அமைச்சர் பதவியைப் பிரதமர் பறித்துள்ளதாகக் கூறப் படுகின்றது.

இதற்கிடையில், தாய்லாந்தில் ஒவ்வொரு வீட்டிலும் பறவைக் காய்சால் பாதிக்கப் பட்டவர் உண்டா என்பதை கண்ட றிய தொண்டு நிறுவன ஊழியர்கள் பலரை யும் அந்நாட்டு சுகாதாரத்துறை தீவிரமாக களத்தில் இறக்கியுள்ளது. (ப)



மலேசியாவைச் சேர்ந்த 72வயது நபரான கமாருதின் முகமது இதுவரை 53 முறை திருமணம் செய்துள்ளார். ஒவ்வொரு பெண்ணாக விவாகரதது பெற்றுவிட்டு மறுமணம் செய்து கொண்ட அவர், சுழற்சிமுறையில் ஒவ்வொரு பெண்ணாக தனது முதல் மனைவி கதீனா உதினை 53 ஆவதாக மீண்டும் திருமணம் செய்துள்ளார். கோலாலம்பூரில் நடநத திருமண விழாவில் இந்த தம்பதியர் போட்டோவுக்கு காட்சியளித்தனர்.



மருத்துவத்திற்கான நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானி ரிச்சர்ட அக்ஸலலிண்டாபிபக் ஆகியோருக்கு கூட்டாக வழங்கப்படுகறது. இப் பிரிசைப் பெறுவதற காக மருத்துவ ஆய்வில் அவர்கள் ஈடுபட்டிருப் பதை படத்தில் காணலாம்

## சீனப் பொறியியலாளர்கள் சாதனை
# 5650தொன் எடையுள்ள கட்டடத்தை அப்படியே 200அடி நகர்த்தினர்

(பெய்ஜிங்)

சீனாவில் ஷாங்காய் நகரில் உள்ள 5650 தொன் எடையுள்ள பிரபல கலையரங்கம் ஒன்றை 200 அடி தூரத்தில் உள்ள மற்றோர் இடத்துக்கு நகர்த்தி சீனப் பொறியியலாளர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

74 ஆண்டுகள் பழமை வாய்ந்த இக் கட்டடத்தை புதுப்பிக்கும் பணிகள் 2002 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் திகதி தொடங்கியது.எனினும் இக் கட்டடத்தின் இருப்பிடம் திருப்தியளிக்காததால் அதனை 83.26 கோடி ரூபா செலவில் தாம் விரும்பிய இடத்திற்கு வைத்துள்ளனர்.

இக்கலையரங்கு முன்பைவிட 4 மடங்கு அதிக அழகைக் கொண்டதாக புதுப்பிக்கப்பட்டு தான் வேறொரு இடத்துக்கு நகர்த்தப்பட்டுள்ள கலையரங்கம் மீண்டும் இம் மாதம் 1 ஆம் திகதி செயல்படத் தொடங்கியது. முதலில் பிரிட்டிஷ் ரோயல் இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.2006 ஆம் ஆண்டுவரை ரிசர்வ் செய்யப்பட்டுள்ள இது ஷாங்காய் நகரிலேயே மிகவும் பெரியது ஆகும். (ப)

# பலஸ்தீனம் மீதான ஆக்கிரமிப்பை கண்டிக்கும் இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா இரத்துச் செய்துள்ளது

(வாஷிங்டன்)

ஐக்கிய நாடுகள் சபையில் இஸ்ரேலுக்கு எதிராக அரபு நாடுகள் கொண்டு வந்த தீர்மானத்தை அமெரிக்கா தமது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி ரத்து செய்தது.

பலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல தொடர்ச்சியாக தாக்குதல் நட த்தி வருகிறது. அங்குள்ள தீவிரவாதிகளை அழிப்பதாக கூறி காஸா நகரத்தின் வடக்கு பகுதிக்குள் தமது படைகளை நிறுத்தி தொடர் தாக்குதலில் ஈடுபட்டுள்ளது.

இதில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர். இஸ்ரேலின இந்த படையெடுப்பை கண்டித்து அரபு நாடுகள் ஐககிய நாட்டுச் சபையில் தீர்மானம் கொண்டு வந்தன.

பலஸ்தீன பகுதியில் நடத்தும் தாக்குதலை இஸ்ரேல் உடனடியாக கைவிட வேண்டும். படைகளை திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும். என அரபு நாடுகள் கொண்டு வந்த தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பிரிட்டன், ஜெர்மனி உட்பட 15 நாடுகள இந்த தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்தன.

ஆனால். இந்தத் தீர்மானத்தை அமெரிக்கா நேற்று முன்தினம் தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி தற்கொலைப் படை தாக்குதல் சம்பவங்களையும் கண்டிப்பதாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல், இஸ்ரேல மட்டும் தாக்கு தலை கைவிட்டு விட்டு, படைகளை வாபஸ் பெற வேண்டும என்று கூறி தீர்மானம் கொண்டு வருவது ஒரு தலைப்பட்சமானது. மேலும் இது தீவிரவாதிகளை ஊக்கப்படுத்தக் கூடியது என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. (ப)

WORLD NEWS உலக தரிசனம்

## உச்சி மாநாடு இரத்து

(பிரஸ்ஸல்ஸ்)

இம்மாதம் நெதர்லாந்து ஹேக் நகரில் நடைபெறவிருந்த இந்தியா மற்றும் ஐரோப்பிய யூனியன் தலைவர்களின் மாநாடு இரத்து செய்யப்பட்டுள்ளது.

ஐரோப்பிய யூனியன் சார்பில் நெதர்லாந்து அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்நாட்டில் கடும் பிரச்சினைகள் இருப்பதால் உச்சி மாநாட்டை இரத்து செய்ய வேண்டும் என்று இந்திய அரசு கோரியதுஎன்று அறிவித்துள்ளது. (ப)

# சதாமின் ஆட்சி பற்றி விமர்சிப்பதில் அமெரிக்கா அடிக்கடி'பல்டி'

(வாஷிங்டன்)

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனுக்கும் சர்வதேச பயங்கரவாதி ஒஸாமா பின்லேடன் தலைமையிலான அல்-கெய்டா அமைப்பினருக்கும் இடையே தொடர்பு இருப்பதற்கான வலுவான ஆதாரங்கள் இல்லை என்று அமெரிக்கப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ரம்ஸ்பெல்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவுக் கவுன்சில் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இத் தகவலைத் தெரிவித்தார்.

முந்தைய ஈராக் அரசுக்கும் அல்-கெய்டா தீவிரவாதிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்று கடந்த 2002 ஆண்டு செப்டம்பர் மாதம் ரம்ஸ்பெல்ட் கூறியிருந்தார். இப்போது அவரே இதற்கு ஆதாரம் இல்லை எனக் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அமெரிக்கா தரப்பிலிருந்து வெளியாகும் ஈராக் பற்றிய தகவல்கள் முன்னுக்குப் பின் முரணாக அமைந்திருப்பதால் அமெரிக்காவின் செயற்பாடுகள் குறித்து சர்வதேச மட்டத்தில் நம்பிக்கையீனம் ஏற்பட்டுள்ளது. (ப)



லண்டனில் உள்ள ட்ரபால்கர் சதுக்கத்தில் கலைக் கண்காட்சி நடக்கிறது. இதையொட்டி அங்கு வாழைப்பழ குவியல் உருவாக்கப்பட்டிருந்தது. கண்காட்சிக்கு வந்த பார்வையாளர்கள் ஒவ்வொரு வாழைப் பழமாக உருவி, பசிக்கு புசித்து விட்டு சென்றனர்.

# சமையலறை வெப்சைட்

சமையலறை எப்படி இருக்க வேண்டும் என்பதற்காக வெப்சைட் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சமையலறை வட்டில் மிக முக்கியமானது அங்கு என்னென்ன விஷயங்கள் இருக்க வேண்டுமோ, அவை அனைத்தும் சரியான வகையில் இருக்க வேண்டும். சுத்தமாகவும் அதே சமயம் வேலையை எளிதாககும் படியும் இருக்க வேண்டும்.



இடம் விசாலமாக இருக்க வேண்டும் அதே நேரத்தில் சமையலுக்குத் தேவையான பொருட்கள் அனைததும் ஓரிடத்தில் இருக்க வேணடும். தண்ணீர் குழாய் இருக்க வேண்டும். ஆனால் ஈரம் படாதவாறு அமைக்க வேண்டும்.

அடுப்பு, பாத்திரங்கள், டப்பாக்கள, காஸ் சிலிண்டர், பிரிட்ஜ், மிக்ஸி, சமையல் புத்தகம், கறி, காய்றி மைகரோவேல் ஓவன், டைனிங் டேபிள, குப் பைத தொட்டி, என்று சமையலறையில் இடம் பெற்றிருக்கும் பொருட்கள் ஏரா ளம்.


ஒரு நல்ல சமையலறை எது போன்று வடிவமைக்க வேண்டும். அதே சமயம் அது வேலையை கடினமாக்காத வகையில் இருக்க எப்படி அமையவேண்டும் என்பதற்கு உலகம முழுவதிலும் இருந்து 62 கலைஞர்கள் வரவழைக் கப்பட்டனர். அவர்களின் ஆலோசனைக் கமைய இந்த வெப்சைட் உருவாககப்பட்டுள்ளது. இந்த வெப்சைட்டில் சமையலறையின ஒவ்வொரு பாகத்தையும் தேர்வு செய்து அதன் வடிவமைப்பு மற்றும் முறைகளை அறிந்து கொள்ள முடியும். (ப)

## இந்திய - அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரில்

# எமது பந்து வீச்சு முழுப்பலத்துடன் இருக்கிறது

## இந்திய அணித்தலைவர் கங்குலி நம்பிக்கை

ஒருநாள் போட்டியின் உற்சாகத்துக்கு கொஞ்சம் ஓய்வுகொடுப்போம். இப்போதைக்கு கிரிக்கெற்




றின் நிஜ சோதனைக் களமான டெஸ்டுக்கு திரும்புவோம். அதுவும் இந்திய, அவுஸ்திரேலிய அணிகள் மோதும் தொடர் என்பதால் விறுவிறுப்புக்கு குறையே இருக்காது. இதனால்தான் இப் போட்டிகளை இந்தியா மட்டுமல்ல உலக ரசிகர்கள் அனைவரும் ஆர்வத்துடன் கண்டுகளிக்கின்றனர். உலகின் நம்பர் வண் அணிக்கு எதிராக மோதுவது எப்போதும் சவாலானது. இத்தொடரின முடிவு ரசிக்ர்களுக்கு சந்தோஷத்தை தரக்கூடியதாக இருக்கும் என இந்திய அணியின் தலைவர் சவ்ரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

என்னைப் பொறுத்தவரை ஒரு தொடரின் முதல் போட்டி மிகவும் முக்கியமானது. இங்குதான் திருப்புமுனை ஆரம்பமாகிறது. பெங்களூர் ஆடுகளம் சுழற்பந்துவீச்சுக்கு சாதகமானது. முதல் நாளில் இருந்தே பந்துவீச்சு நன்றாக இருக்கும். இது போகப்போக இன்றும் அதிகமாகும் என்பதால் நமது ஸ்பின்னர்கள் சாதிப்பதற்கு அதிக வாய்ப்பு உள்ளது.

கடந்த இருமுறை அவுஸ்திரேலியாவுக்கு எதிராக விளையாடிய போது முன்னணி ஸ்பின்னர் ஒருவர் மட்டுமே இடம்பெற முடிநதது. ஆனால் இம்முறை ஹர்பஜன், கும்ளே என இருவருமே உள்ளனர். இது நமக்கு சாதகமான அம்சம். இவர்களைத் தவிர ஜாகிர், பதான் என அனைத்து முக்கிய வீரர்களும் உள்ளதால் நமது பந்துவீச்சு முழுப் பலத்துடன் காணப்படுகிறது.

இந்திய அணியில் சசசின் அவுஸ்திரேலிய அணியில் ரிக்கிப் பொண்டிங் இடம்பெற முடியாமல் போய்விட்டது. சச்சின் இல்லாதது நமது அணிக்கு மிகப்பெரும் இழபபு என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இவர் விரைவாக குணமடைந்துவருவது அணிக்கு தெம்பு அளிக்கும். சென்னை டெஸ்டில் இவர் விளாசுவார் என்று உறுதியாக நம்புகிறேன்.

கடந்த சில வாரங்களாக இந்திய கிரிக்கெற் போர்டு மிகப் பெரும் குழப்பங்களை சந்தித்தது. இந்த சுழ்நிலையில், அணியின் பந்துவீச்சுத் திறனை வலுப்படுத்தல் பயிற்சியாளர் ஒருவர் நியமிப்பது அவசியம் என கங்குலி தெரிவிததார்.



இந்திய – அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையேயான கிரிக்கெட் டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினமபெங்களூரில் தொடங்கியது. 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட இத்தொடரின் முன்னதாக நடைபெற்ற கோப்பை அறிமுக விழாவில் அவுஸ்திரேலிய. அணி தலைவர் கில்கிறிஸ்ட் மற்றும் இந்திய அணித் தலைவர் கங்குலி ஆகியோர் கோப்பையுடன் .

## இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையான

## டெஸ்ட் ஹொக்கித் தொடரில்

# பாகிஸ்தான் தொடர்ந்தும் முன்னிலை

டெஸ்ட் ஹொக்கித் தொடரில் நேற்று முன்தினம் நடந்த ஆறாவது போட்டியில் இந்திய அணி 1-1எனற கோல் கணக்கில் பாகிஸ்தானை சமன் செய்தது. இதனால் அடுத்த இரண்டு போட்டிகளில் இந்திய அணி வெற்றிபெற வேண்



டிய கட்டாயத்தில் உள்ளது.


இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே 8போட்டிகள் கொண்ட நட்புறவு டெஸ்ட் ஹொக்கி தொடர் நடந்துவருகிறது. முதல் கட்டமாக கடந்த மாதம் பாகிஸ்தானில் நடந்த 4 போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியா 1-2என்ற நிலையில் பின்தங்கியது. இரண்டாம் கட்ட லீக் தொடர் தற்போது இந்தியாவில் நடக்கிறது. டில்லியில் நடந்த தொடரின் ஐந்தாவது போட்டியில் பாகிஸ்தான் 3-1என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆறாவது போட்டி நேற்று முன்தினம் சண்டிகரில் நடந்தது.

காயம் காரணமாக இந்திய அணி கப்டன் தீலிக்டர்கி பங்கேற்கவில்லை. ஆட்டம தொடங்கிய 22ஆவது நிமிடத்தில் பாகிஸ்தான் அணியின் கஷம்பர் அலிகோல் அடித்து அணிக்கு முன்னிலை பெற்றுத்தந்தார். இதற்குப் பதிலடியாக இந்திய அணியின் இக்னேஷ்டர்கி 32ஆவது நிமிடத்தில் கோல் அடித்து சமன் செய்தார்.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இருஅணி வீரர்கள் ஒருவருக்கொருவர் இணையான ஆட்டத்தினை வெளிப்படுத்தினர். இதனால் கோல் ஏதும் அடிக்கப்படவில்லை. இறுதியில் 1-1என்ற கோல் கணக்கில் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இதனமூலம் பாகிஸ்தான் அணி தொடரில் 3-1என்ற முன்னிலை வகிக்கிறது. இந்தப் போட்டியில் இந்திய வீரர்களின் ஆட்டம் மோசமாக இருந்தது. ஐந்து பேனால்டி கார்னர் வாய்ப்புக்களை வீணாக்கிய இவர்கள் வெற்றிபெறத்தவறினர்.

மேலும் போட்டியை சமன் செய்வதன் மூலம் நமது அணி தொடரை வெலலும் வாய்ப்பையும் இழந்தது. அதிகபட்சம் தொடரை சமன் செய்யவே அடுத்த இரண்டு போட்டிகளை வெல்லவேண்டும். எழாவது போட்டி இன்று அம்ரி ஸ்டரில் நடைபெறும். (ப)



**நேற்று நடந்த முதல்நாள் ஆட்டத்தில் சிறப்பாக ஆடி ஐந்தாவது விக்கெற்றுக்கு 107ரன்களைக் குறித்த கேடிச்-கிளார்க் ஜோடி**

## விளையாட்டு செய்திகள்

## இந்திய அணியை பலப்படுத்த புதியதொரு ஸ்பின்னர் தேவையில்லை

### கும்ளே கருத்து

டெஸ்ட் அரங்கில் விக்கெற் வீழ்த்திய இந்திய வீரராக விரும்



புகிறார் கும்ளே. 33 வயதான இவர் நேற்று முன்தினம் 400 விக்கெற் வீழ்த்தி சாதித்தார். கடந்த 14 ஆண்டுகளாக இந்திய கிரிக்கெற்றுக்காக சேவைசெய்துவரும் கும்ளே 19வயது வீரராக 1990இல் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் அறிமுகமானார். நேற்று முன்தினம் லேசான காய்ச்சலால் அவதிப்பட்ட போதும் மனம் தளராமல் மகத்தான மைல்கல்லை எட்டினார். இவர் தனது அடுத்த இலக்கு 435 விக்கெற் என்கிறார்.

இதுபற்றி இவர் கூறியதாவது, 300 விக்கெற் வீழ்த்தியபோதே 400ஐ எட்டமுடியும் என்ற நம்பிக்கை பிறந்தது. இன்றும் 35விக்கெற் வீழ்த்தி இந்தியா சார்பில் அதிக விக்கெற் வீழ்த்தியவர் பட்டியலில் முதலிடம் பிடிக்கவேண்டும். அதாவது கபிலின் 434 விக்கெற் சாதனையை முறியடிக்க ஆசை. இதுதான் எனது அடுத்த இலக்கு. 400 விக்கெற் வீழ்த்தியவர்களில் மூன்று பேர் மட்டுமே ஸ்பின்னர்கள். இப் பட்டியலில இடம்பெற்றதை நினைக்கும் போது மிகவும் பெருமையாக உள்ளது.

எனக்கு ஆதரவு அளித்த பெற்றோர், குடும்பத்தினர், நண்பர்கள் முன்னிலையில் சாதித்ததில் மகிழ்ச்சி. இன்னும் 70 அல்லது 80 ரண்களுக்குள் ஆவுஸ்திரேலிய அணியை சுருட்டிவிட்டால் நமக்கு வாய்ப்பு உள்ளது.

மூன்றாவது ஸ்பின்னர் ஒருவரை அணியில் சேர்த்திருக்கலாம் என்கிறார்கள். இதற்கு அவசியமில்லை. ஏனென்றால் ஜாகிர், பதான் சிறப்பாகவே பந்துவீசினார்கள். அணிக்காக எனது நூறு சதவீதம் பங்களிப்பை தொடர்ந்து வெளிப்படுத்துவேன் என்றார். (ப)

# கபில்தேவின் சாதனையை முறியடிக்க சுழல்பந்து வீச்சாளர் கும்ளே முயற்சி

அனில் கும்ளே நெருக்கடியான நேரங்களில் இந்திய கிரிக்கெற் அணிக்கு நம்பகமானவர்.

இந்திய அணியில் நினைத்துப்பார்க்க முடியாத வீரர். ஹர்பஜன் வருகைக்குப் பிறகு, படி



ஆனந்தத்தில் இந்திய ரசிகர்கள்.

சற்றே தளர்ந்தாலும் வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் அணியின் வெற்றிக்கு பங்களிக்கத் தவறாதவர்.

பாகிஸ்தானுக்கு எதிராக 1999 இல் நடநத போட்டியில் ஒரே இன்னிங்சில் 10 விக்கெற் வீழ்த்தி சாதித்த அனில், இந்திய ஸ்பன் வரலாற்றில் என்றென்றும் நினைவில் கொள்ளத்தக்க சாதனையை, தனது சொநத ஊரில் நேற்று முன் தினம் செய்து முடித்தார்.

சைமன் கேடிச் விக்கெற்றை வீழ்த்திய போது, டெஸ்ட் போட்டிகளில் 400 விக்கெற்றுக்கு மேல் வீழ்த்திய இரண்டாவது இந்தியர் என்ற பெருமைக்கு சொந்தக்காரர் ஆனார்.

இந்த சாதனைசெய்ய அவருக்குத் தேவைப்பட்டது 85 போட்டிகள். முன்னாள் கப்டன் கபில் தேவ் 131 போட்டிகளில் 434 விக்கெற் எடுத்து, டெஸ்ட் கிரிக்கெற்றில் அதிக விக்கெற் வீழ்த்திய இந்தியர் என்ற முதலிடத்தில் இருக்கிறார்.

அவரது சாதனையை நோக்கி பயணததைத் தொடங்கிய கும்ளே அனேகமாக, இந்தத் தொடர் முடியும் போது, கபில் சாதனையை மிஞ்சும் வாய்ப்புக்கள் அவருக்



குக்கிடைக்கலாம்.

பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் 397விககெற்றுக்களுடன் நேற்று முன்தினம் காலை களமிறங்கிய அனில் கும்ளேக்கு அமோக வரவேற்பு. பீல்டிங் செய்ய பவுண்டரி எல்லைக்கு வரும்போதெல்லாம் கரகோஷம் எழுப்ப உற்சாகப்படுத்தினார்கள் ரசிகர்கள். ஆட்டத்தில் 22 ஓவர் முடிந்ததும் அனில் கையில் பந்தைக் கொடுத்தார். கப்டன் ஒட்டுமொத்த அரங்கமும் எழுந்து நின்று அவரை வாழ்த்தியது.

விக்கெற்றுகள் அடுத்தடுத்துக் கிடைத்தன மார்டின் 398, லேமன்



400வது விக்கெட்டாக வீழ்ந்த சைமன் கேடிச் (இடது) கும்ளேயை வாழ்த்தும் இந்திய வீரர்கள்.

399 அதற்குப் பிறகு அனில் பந்து வீசும் போதெல்லாம் அந்த சாதனை வினாடிக்காக் காத்திருந்தனர் ரசிகாகள். 80வது ஓவரின் ஐந்தாவது பநது 400வது விக்கெற்றாக கேடிச்சை அவர் வீழ்த்த அரங்கம் முழுவதும் எழுந்துநின்று கொண்டாடியது. இதே பெங்களூரில்தான் 100 மற்றும் 200வது விக்கெற்றுக்களையும் வீழ்த்தியிருக்கிறார் கும்ளே. சாதனை வீரரை தேசமே பாராட்டுகிறது. (ப)

# க.பொ.த (சாதாரண தரம்)
# மாதிரிப் பரீட்சை–2004
# கணிதம் II

நேரம்: 3மணி

ஆக்கம் தி. இ. நவரத்தினம்
ஓய்வு பெற்ற உதவி அதிபர்.

**விரும்பிய 10 வினாக்களுக்கு விடை தருக.**
**(செய்கை வழி தெளிவாகக் காட்டப்படவேண்டும்.)**

01. (i) காரணி காண்க: $6x^2 + 7x + 2$


(ii) தீர்க்க: $x + y = 7$
$3x - y = 5$

(iii)இருபடிச்சமன்பாட்டைத் தீர்க்க: $x^2 - 12x + 35 = 0$

02. (a)ஒரு வியாபாரி ஒரு வானொலிப் பெட்டியை ரூபா 20,000க்கு கொள்வனவு செய்து 12% இலாபம் வைத்து விலை குறிக்கிறார்.
(i)வானொலிப் பெட்டியின் குறித்த விலை யாது?
(ii) விற்கும்போது குறித்த விலையில் 5% கழிவு கொடுக்கிறார். அது விற்கப்படும் விலை யாது?
(iii)இலாபத்தைக் கொள்விலையின் நூற்றுவீதமாகத் தருக.
(b)கனடாவில் வசிக்கும் ஒருவன் தன் பெற்றோருக்கு 65 கனடியன் டொலரை அனுப்பி இருந்தான். ஒரு டொலரின் பெறுமதி ரூபா 76.44 எனக்கொண்டு.
(i) அதன் பெறுமதியை இலங்கை நாணயத்தில் காண்க.
(ii)மாற்றும்போது 5% கொமிசன் கொடுத்தால் அவர்களுக்கு மீதமாகக் கிடைக்கும் தொகை எவ்வளவு?

03. (i)ஒரு முக்கோணியின் அகக்கோணங்களின் கூட்டுத்தொகை இரண்டு செங்கோணங்களுக்குச் சமமாகும் என நிறுவுக.

(ii)




ABC என்பது ஒரு முக்கோணி. BO, CO என்பன $A\hat{B}C$, $A\hat{C}B$ என்பனவற்றின் இரு கூறாக்கிகள். பின்வருவனவற்றை நிரப்புக.


$a + 2x + 2y = 180^o$
$\therefore 2x + 2y = .......$
$\therefore x + y = .......$
$x + y + B\hat{O}C = 180^o$
$\therefore B\hat{O}C = 180 - (......)$
$= 180 - (.......)$
$= 90 + .........$

04. ஒருவன் வீடமைப்புக் கடனாக 75,000 ரூபாவை 24% வருட வட்டியுடன் 5 வருடங்களில் சமமாத தவணைக் கட்டணங்களாகச் செலுத்துவது என்ற அடிப்படையில் பெற்றுக்கொண்டான்.
(i) ஒரு மாதத்தில் செலுத்தப்படும் கடன் பணத்தைத் தருக.
(ii) ஒருமாதக் கடன் பணத்துக்கான ஒருமாத வட்டி யாது?
(iii) வட்டி கணிக்கப்படவேண்டிய மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
(iv) மொத்த வட்டியைக் காண்க.
(v) தவணைக்கட்டணம் ஒன்றின் பெறுமானத்தைக் காண்க.

05. (a) ஒரு கூட்டல் விருத்தியின் nம் உறுப்பு 3n+1 என்னும் கோவையினால் தரப்பட்டுள்ளது.
(i) இதன் முதல் உறுப்பைக் காண்க.
(ii) பொதுவித்தியாசம் யாது?
(iii) 10ம் உறுப்பு யாது?
(iv) முதல் 10 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.
(b) ஒரு பெருக்கல் விருத்தியின் இரண்டாம் உறுப்பு 12. முதல் மூன்று உறுப்புக்களின் கூட்டுத்தொகை 42.
(i) முதல் உறுப்பையும் பொதுவிகிதத்தையும் காண்க.
(ii) இதன் இரு விருத்திகளையும் காண்க.

06. (i)ஒரே அடியிலும் ஒரே சமாந்தரக்கோடுகளுக்கு இடையிலும் அமைந்துள்ள இணைகரங்களின் பரப்பளவு சமன் என நிறுவுக.

(ii)




உருவில் ABCD. DCFE இணைகரங்கள் ஆகும்.
இணைகரம் ABCD + இணைகரம் DCEF = இணைகரம் ABFE என நிறுவுக.

07. ஒரு உறையினுள் வடிவத்தில் ஒரேமாதிரியான 5 சிவப்பு மணிகளும், 3 நீல மணிகளும் உள்ளன. எழுமாற்றாக ஒரு மணி எடுக்கப்பட்டு அதன் நிறம் குறித்துக்கொண்டபின் மீண்டும் உறையினுள் இடப்பட்டு மீண்டும் ஒரு மணி தெரிவுசெய்யப்படுகிறது. மரவரிப்படம் வரைந்து பின்வருவனவற்றைக் காண்க.
(i)இரண்டும் நீலமாக இருப்பதற்குரிய நிகழ்தகவு.
(ii)இரண்டும் சிவப்பாக இருப்பதற்குரிய நிகழ்தகவு.
(iii)ஒரு மணி மட்டும் சிவப்பாக இருப்பதற்குரிய நிகழ்தகவு.

08. $y = 2x^2 + 3x - 6$ இன் வரைபை வரைக. உமது வரைபில் இருந்து பின்வருவனவற்றைக் காண்க.
(i) சார்பின் இழிவுப்பெறுமானம்
(ii) சமச்சீர் அச்சின் சமன்பாடு
(iii) $2x^2+3x - 6 < 0$ ஆகும் x இன் பெறுமான வீச்சு.
(iv) $2x^2+3x - 6 = 0$ என்ற சமன்பாட்டின் தீர்வு.

09. தரம் 11இல் உள்ள 40 மாணவர்கள் கணித பாடத்தில் பெற்ற புள்ளிகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.


| வகுப்பாயிடை புள்ளி | 1-10 | 11-20 | 21-30 | 31-40 | 41-50 | 51-60 |
|---|---|---|---|---|---|---|
| மீடிறன்f மாணவர்தொகை | 2 | 8 | 15 | 8 | 5 | 2 |

(i) 21-30 என்ற வகுப்பின் நடுப்பெறுமானத்தை எடுகொண்ட இடையாகக் கொண்டு பரம்பலின் இடையைக் காண்க.
(ii). இடைப்புள்ளியை பரும்படியாகக் கொண்டு புள்ளிகளின் கூட்டுத்தொகையைக் காண்க.

10. (i) $2^x \times 2^3 = 2^8$ Xஇன் பெறுமானத்தைக் காண்க.
(ii) மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தாமல் காண்க.
$மட_{10}75 + மட_{10}4 - மட_{10}3$
(iii) மடக்கை அட்டவணையைப் பயன்படுத்திக் காண்க.
$$\frac{35.7 \times (5.24)^2}{25.5}$$

11.(i) கம்பனி ஒன்றின் 10ரூபாப் பங்குகளை 15ரூபாப் படி வாங்குவதற்கு ரூபா 30,000 முதலீடு செய்யும் ஒருவர் ஒரு வருடத்தில் பெறும் வருமானம் ரூபா 3600 எனின் கம்பனி வழங்கும் பங்கு லாபத்தின் சதவீதம் யாது?
(ii) ரூபா 20,000க்கு 12% கூட்டுவட்டிப்படி 3வருடத்தில் கிடைக்கும் மொத்தம் யாது?

12.




100m உயரம் உள்ள வெளிச்ச வீட்டுக் கோபுரத்தின் உச்சியில் இருந்து பார்க்கும்போது கடலில் ஒன்றன்பின் ஒன்றாக நிற்கும் இரு கப்பல்களின் இறக்கக் கோணங்கள் முறையே $60^0, 30^0$ ஆகும். நோக்குனரும் கப்பல்களும் ஒரே நிலைக்குத்துத் தளத்தில் காணப்படுகின்றன. கப்பல்களிடையே உள்ள தூரத்தைக் காண்க.


## கணிதம் பகுதி I இன் விடைகள்

1.5Kg 2.$1\frac{4}{9}$ 3. $\frac{6}{a-b}$ 4.$125^0$ 5.16நாட்கள் 6.$110^0$

7.x= 4 8.f=2 9.11000$_{இரண்டு}$ 10.8% 11.$30^0$ 12.60மணி

13.y=4x+5 (14) (i)$45^0$ (ii)8பக்கம் 15.$X^2 + \frac{1}{X^2} = 7$

16.24ரூபா 17.X=13 18.25 (19)




20.$40^0$ 21.95ரூபா 22. (i)6.92 (ii)8.65 23.4 24.(i)$\frac{8}{10}$

(ii)$\frac{6}{10}$ 25(i){1,9} (ii){3,5,7} 26. 3.2cm 27. (i)100

(ii)1000ரூபா 28.X:Y= 4:3 29.ரூபா 2125 30. X = 5

கா.பொ.த(சா/த) மாணவர்களே!
வலம்புரியில் தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள் வெளிவரும்
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

# க.பொ.த (சாதாரண தரம்)
# மாதிரிப் பரீட்சை—2004

நேரம்: 1மணி **கடல்வாழ் உயிரின வளத் தொழில்நுட்பம் I**

ஆக்கம் ஆசிரியர்.திரு.ப.விஜயகுமார்
Dip.in fish (Jaffna)

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01.இலங்கையின் கடற்கரை வலயத்தின் நீளம் அண்ணளவாக
i.1700Km ii.1200Km iii.800Km iv.2700Km

02.நீரில்லத்தில் மீன் அமைதியின்றி நீரின் மேற்பரப்பிற்கு வந்து குமிழிகள் விடுமாயின் அதற்கான காரணம்
i.அதற்குக் காயம் ஏற்பட்டிருக்கின்றமை.
ii.நீரில் கரைந்திருக்கின்ற வளி மிகையாகி இருக்கின்றமை.
iii.நீரிலுள்ள வளி குறைவாகி இருக்கின்றமை.
iv.நீரில் புற இரசாயனப் பொருள் கலந்துள்ளமை.

03.முருகற் கற்களின் நிறமானது
i.நீலம் ii.மென்சிவப்பு iii.ஊதா iv.மேற்கூறிய மூன்றும்

04.இலஙகையைச் சூழ அமைந்துள்ள கண்டமேடையின் சராசரி அகலம்
i.40Km ii.22Km iii.60Km iv.15Km

05.இலங்கை கடல் எல்லையில் காணப்படும் முலையூட்டிகளாவன
i.கடற்பன்றி, டொல்பின், சுறா
ii.கடலாமை, திமிங்கலம், டொல்பின்
iii.கடற்சிங்கம், கடலாமை, டொல்பின்
iv.டொல்பின், திமிங்கலம், கடற்பன்றி

06.இலங்கையின் மீன்பிடி விரிவாக்க மாவட்டங்கள் எத்தனை?
i.17 ii.15 iii. 27 iv.25

07.மீன்பிடிக் கைத்தொழிலின் போது வெவ்வெறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படும் முடிச்சு வகைகளில் காணப்படவேண்டிய சிறப்பியல்புகள் யாது?
i.முடிசசு இலகுவாக இடக்கூடியதாக இருத்தல்.
ii.முடிச்சு இலகுவில் அவிழ்க்கக்கூடியதாய் இருத்தல்.
iii.முடிச்சு அவிழாது இருத்தல்.
iv.முடிச்சு இலகுவில் இடவும் விரைவில் அவிழ்க்கவும் கூடியதாய் இருத்தல்.

08.கசியிழைய மீன்வகை யாது?
i.திருக்கை ii.பாரை iii.சூரை iv.விலாங்கு

09.மீனகள் கூட்டமாக நடமாடும் பிரதேசங்களைத் தொலைவிலிருந்து அடையாளம் காண்பதற்கு உதவக்கூடிய இயல்புகள் 3 கீழே தரப்பட்டுள்ளது.
A-அப்பிரதேசங்கள் நீரின் கீழே கருமை நிறமாகக் காட்சியளிக்கும்.
B-அப்பிரதேசத்தின் கருமை நிறம் காரணமாக நீர் நிரலொன்று அசைவதுபோற தோற்றமளிக்கும்.
C-அதை அண்டிய பிரதேசங்களில் கடல்வாழ் முலையூட்டிகள் சஞ்சரிக்கும்.
மேலுள்ளவற்றுள் சரியான விடைகளாவன
i.Aஉம் Bஉம் ii. Bஉம் Cஉம் iii.Aஉம் Cஉம் iv. A,B,Cமூன்றும்.

10.பின்வருவனவற்றுள் குடிபெயர்வு அடையும் மீனினங்கள்
i.சூரை, கிளவாலை ii. அறக்குளா, பரவா
iii.கீரிமீன், சாலைமீன் iv. சுறா, திருக்கை

11.மீன்களின் உணவுட்கொள்ளல் முறையை அறிந்துகொள்ள உதவும் பிரதான புற இயல்புகள்
i.வாயின் அமைப்பு, பற்கள் மற்றும் பூத்தாங்கியின் வளர்ச்சி.
ii.வாயின் அமைப்பு, கண்ணின் பருமன்.
iii.செதிள்கள் அமைந்துள்ள விதம், நீந்தும் வேகம்.
iv.நீந்தும் வேகம், வாற் செட்டைகளின் தன்மை.

12.கடலில் உள்ளபோது கலங்கரை விளக்கத்தை இனங்காண உதவுவது?
i.கலங்கரை விளக்கத்தின் உயரம், ஒளி பாய்ச்சப்படும் திசை.
ii.கலங்கரை விளக்கததிலிருநது பாய்ச்சப்படும் ஒளியின் அலைநீளம்.
iii.கலங்கரை விளககததிற்கு அண்மையிலுள்ள பிரதேசத்தின் அமைவு.
iv.கலங்கரை விளக்கத்திலிருந்து பாயச்சப்படும் ஒளியின் நிறம், ஒளி பாய்ச்சப்படும் கோலம்.

13.மீன்களின் உடலினுள் காணப்படும் காற்றுப்பையால் ஆற்றப்படும் பிரதான தொழில்.
i.உடலினுட் காணப்படும் கழிவுப் பதார்த்தங்களைச் சேகரித்தல்.
ii.சுவாசத்துக்கு தேவையான ஒட்சிசன் அடங்கிய வளியை தேக்கி வைத்தல்.
iii.உடல்மிதப்பதனை கட்டுப்படுத்தல்.
iv.'பதாங்க' நுரையீரலாகத் தொழிற்படல்.

14.எதிரொலிமானி (echo sounder) மூலமாக
i.நீரின் ஆழத்தை அளக்கலாம்.
ii.படகின் அமைவை அறிந்துகொள்ளலாம்.
iii.காற்றின் திசையை அறிந்துகொள்ளலாம்.
iv.நீரோட்டங்களின் திசையை அறியலாம்.

15.ஒரு சக்தி மட்டத்திலிருந்து அதற்கு மேலுள்ள சக்தி மட்டத்துக்கு சக்தி கடத்தப்படுபோது சக்தி இழக்கப்படுவது.
i.அங்கிகளின் சுவாசத்தின் மூலம்.
ii.அங்கிகளின் கழிவுகள் மூலம்.
iii.அங்கிகளின் இனப்பெருக்கச் செயற்பாட்டின் மூலம்.
iv.மேற்கூறிய மூன்று வழிகளிலும்.

16.இலங்கையில ஏற்றுமதி செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ள அங்கி
i.முட்டையிடும் ,சிங்கறால். ii.முட்டையிடும் இறால்.
iii.ஓடு கழற்றப்படாத ஓடுடைய கணவாய் iv.முட்டையிடும் கடலட்டை.

17.தனது வாழ்க்கை வட்டத்தை பூரணப்படுத்த கடற்சூழலையும் கடனீரேரிச் சூழலையும் பயன்படுத்தும் அங்கி.
i.இறால் ii.நண்டு iii.கடலாமை iv.கெலிறு

18.மீனவர்களால் "டிஸ்கே"வலை என அழைக்கப்படுவது
i.அடியில் இடப்படும் செவுள் வலை ii.மிதக்கும் செவுள் வலை
iii.மும்மை வலை iv.இறால் பிடிக்கும் வலை.

19.வலையின் இளக்காரம் (குழைவுச் சுருக்கம்) விடப்படுவதற்கான பிரதான காரணம்.
i.மீன்களை பூக்களால் சிறைப்படுத்திப் பிடிப்பதற்காக.
ii.அதிக அளவு மீன்களைப் பிடிப்பதற்காக.
iii.சேதம் ஏற்படாதவாறு மீன்களைப் பிடிப்பதற்காக.
iv.மீன்கள் வலையில் இருந்து விழுவதைத் தவிர்ப்பதற்காக.

20.திசைகாட்டி எப்பொழுதும்
i.உண்மை வடக்கை காட்டும் ii.காந்த வடக்கை காட்டும்
iii.வளியடைப்பு வடக்கை காட்டும். iv.மேற்கூறிய மூன்றும்.

21.'லைலா' வலையைத் தயாரிப்பதற்கு 500m நீளமான கயிறும் 2000m நீளமான வலையும் தேவைப்பட்டது. இதன் தொங்கல் விகிதம் யாது?
i.25% ii.35% iii.400% iv.15%

22.குறிப்பிட்ட காலப்பகுதியில் பாடும் மீன்கள் பிடிபடும் இடம்.
i.திருகோணமலை ii.மட்டக்களப்பு iii.யாழ்ப்பாணம். iv.மன்னார்.

23.கடல் நீரின் 1000பங்குக்கு எத்தனை அளவு உவர்தன்மை உள்ளது.
i.34PPT ii.53PPT iii.35PPT iv.45PPT


24.கடற் புற்கள் தொடர்பான கூற்றுகள் சில கீழே தரப்பட்டுள்ளது.
A-இவை பூக்கும் தாவரங்களாகும்.
B-இவை ஆதாரத்துடன் ஒட்டி வளரும்.
C-கடற் பன்றிகளுக்கு உணவாகவும் வாழிடமாகவும் அமையும்.
D-இலங்கையின் வடபகுதிக் கடற்பரப்பில் அதிக அளவிற் காணப்படும்
இவற்றுள் சரியானவை
i. A,B,C ii.A,B,C,D iii.A,C,D iv.B,C,D

25.எமது நாட்டைச் சுற்றிவரவுள்ள கடற்பிரதேசத்தில் நாளொன்றில் ஏற்படும் வற்று பெருக்குகளின் எண்ணிக்கை.
i.1 பெருக்கு 1 வற்று ii.1 பெருக்கு 2 வற்று
iii.2 பெருக்கு 1 வற்று iv.2 பெருக்கு 2 வற்று

26.ஏகார் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் அல்கா வகை
i.சாகஸம் ii.உல்வா iii.கிரசிலேரியா iv.ஹலிமிடம்


27.ஆத்திரப் பொடா வகையைச் சேர்ந்த அங்கிகளைக் கொண்ட கூட்டமானது.
i.கணவாய், ஒக்ரோபசு, சிப்பிகள்
ii.கடலட்டை, கடல்இக்கிரி, முருகைக்கல்
iii.இறால், நண்டு, சிங்கி இறால் iv.சுறா, திருக்கை, ஆமை

28.அருகில் காட்டப்பட்ட படமானது இழுவைப்படகில் மேல்கம்பத்தில் இரவில் கட்டப்பட்டு வெளிச்சம் போடப்பட்ட அடையாளமாகும்.




இது குறித்து நிற்பது.
i.வலைகள் இழுத்துச் செல்லுதல்
ii.நங்கூரம் இடப்பட்ட படகு
iii.படகு ஒன்று இன்னொரு படகினால் இழுத்துச் செல்லப்படுதல்
iv.65அடையை விடக் குறைவான நீளங்கொண்ட படகு.

29.கடலில் கட்டுபாட்டினை இழந்த நிலையில் உள்ள படகினை இனம் காட்டுவது




i. ii. iii. iv.

30.  இவ் உருவானது கடலில் உள்ள படகினால் காட்டப்பட்டது. இந்த அடையாளத்தினைத் தொலைவில் உள்ள கப்பல் அவதானித்தது. அதன் கருத்து
i.வள்ளங்களை மீட்கும் படகு என்றும்.
ii.நங்கூரம் இடப்பட்ட படகு என்று.
iii.கட்டுப்பாட்டை இழந்த நிலையிலுள்ள படகு.
iv.மேற்கூறியது ஒன்றும் இல்லை.

31.  படத்தில் கட்டப்பட்ட முடிச்சு
i.போய லையின் முடிச்சு. ii.தட்டை முடிச்சு.
iii.ஆங்கில ஒற்றை முடிச்சு. iv.குளோக் கச்சு முடிச்சு.

32.கடலின் அடித்தளத்தில் வாழும் மீனை இனங்காண்பதற்கு உதவும் பிரதான சிறப்பியல்பு, உடல்
i.நீண்டதாகி இருத்தல் வேண்டும்.
ii.தட்டையாகி இருக்க வேண்டும்.
iii.செதில்களைக் கொண்டிருத்தல்.
iv.இருகவர் உள்ள வாற்செட்டையைக் கொண்டிருத்தல்.

33.  படத்தில் உள்ள அல்கா குறிப்பது
i.உல்வா ii.ஹெலிமிடா
iii.கிரசிலேறியா iv.ஜெலிடியம்

(7.ஆம் பக்கம் பார்க்க.......)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 21



ஏன் நாளை காலை ரயிலில் பிரயாணம் செய்தால் என்ன குடி முழுகிப்போய்விட்டது? உமக்கென்ன பெரிய உத்தியோகம்?" "என்று ஏளனமாக கேட்டார். நான் அவர் நமக்கு இடம் கொடுத்த வராயிற்றே என்று எண் [illegible]" நான் ஒரு கும்பாபிஷேகத்திற்குப் போகிறேன். அவ [illegible] போகவேண்டியதாக இருக்கின்றது என் றேன்.

"ஆமாம்! நீர் போகவில்லையானால் கும்பாபிஷேகமே ஆகாதோ? நான் உம்முடைய நன்மைக்காகத்தான் சொல்லுகிறேன். பணத்தைக் கொடுத்துவிட்டு ஏன் கஷ்டப்படுகின்றீர்?" என்று கூறினார். நான் அவருடைய பேச்சைக் குறைக்கும் பொருட்டு கையில் இருந்த திருப்புகழ் அமிர்தம் என்ற நூலை எடுத்து முகத்தை மறைத்துக் கொண்டு படிப்பது போல் பாவனை செய்தேன்.

திருப்புகழ் அமிர்தத்தைப் பார்த்தவுடன் அவர் முகம் மலர்ந்து "ஐயா! உங்களுக்கு இந்தத்திருப்புகழ் அமிர்தம் வருகின்றதா? எத்தனை வருடங்களாக வருகின்றது? நான் நாயுடு ஜாதி, கறி தின்பவன். இந்த திருப்புகழமிர்தம் படித்து கறி தின்பதைவிட்டு விட்டேன் சைவமாகிவிட்டேன். இதில் வரும் கற்புக்கதைகளைப் படித்து என் மனைவி என்னுடன் எதிர்த்துப்பேசுவதை விடுத்துக் குணவதியாக ஆகிவிட்டாள். இந்தப்புத்தகம் தங்களுக்கு எத்தனை காலமாக வருகின்றது? " என்று கேட்டார்.

நான் "முதலிலிருந்து வருகிறது" என்றேன். அவர் வாரியார் சுவாமிகளை நீங்கள் பார்த்திருக்கின்றீர்களா? அவர் தினம் ஒரு ஊராக இருப்பாராமே! அவர் தான் எனக்கு மானசீக குரு. அவர் என் போன்றவர்களிடம் இனிமையாகவும் எளிமையாகவும் பழகுவாரா?" என்று என்னைத் தொளைத்து தெளைத்துக் கேட்பார். அதற்கு மேல் என்னால் மறைத்துப்பேச முடியவில்லை. "நான் தான் கிருபானந்தவாரி" என்று கூறினேன். அதைக்கேட்டவுடன் நடுங்கி விட்டார்! எழுந்து வணங்கினார்.

"சுவாமி! நான் தங்களை அறியாமலேயே ஏதேதோ பேசிவிட்டேன். என்னை மன்னிக்க வேண்டும். நான் தங்கள் சீடன். நான் தங்களைப் பார்க்க வேண்டும் என்று பலகாலும் தவம் செய்தேன். இன்று அந்த பாக்கியம் கிட்டியது. நீங்கள் மிகவும் பெரியவர்கள். படுக்கை மேல் அமரக்கூடாது. இந்த நாற்காலியில் அமருங்கள்" எனக்கூறி என்னை நாற்காலியில் உட்கார வைத்தார். பழமும், பாலும் கொடுத்து என்னை உபசரித்தார். அளவிற்கு மேல் உபசரித்ததும் ஒரு துன்பமாகவே இருந்தது. அவருடைய அன்பு அப்பூதிநாயனாருடைய அன்பை நினைவு செய்தது. ஈரோடு வரை அந்த வண்டியிலேயே என்னை அழைத்துக்கொண்டு சென்றார். ஈரோடில் ஒரு கூலியைக்கூப்பிட்டு சாமான்கள் எடுப்பித்துத்தானும் ஒரு சாமானை எடுத்துக் கொண்டு திருச்சி ரயிலில் ஏற்றினார்.

சுவாமி! மறுமுறை வரும்பொழுது எனது இல்லத்திற்கு எழுந்தருளவேண்டும். என்னை ஆசீர்வதியுங்கள். நான் அறியாமையால் நடந்துகொண்டதை கூட்டங்களில் சொல்லக்கூடாது என்று தழுதழுத்த குரலில் கூறி வழியனுப்பினார்.

## மதுரையில் பாதபூசை

மதுரையில் மாதந்தோறும் கடைசி சனி, ஞாயிறன்று நான்சென்று விரிவுரை செய்து வந்தேன். மதுரை முனிசிபல் மனேஜரும், எனது ஆப்த நண்பருமாகிய லோகநாதபிள்ளை வீட்டில் தங்குவேன். லோகநாதபிள்ளை அருட்பிரகாச வள்ளலாரிடம் அளவில்லாத அன்பு பூண்டவர். அப்போது மதுரை முனிசிபல் துணைத்தலைவராக திரு.ஷண்முகம்பிள்ளையவர்கள் இருந்தார். இவர் கடவுள் இல்லை என்ற நாத்திகக்கொள்கையுடையவர். மரக்கடை வைத்து வாணிபம் புரிந்துகொண்டிருந்தார். செல்வம் படைத்தவர். நேர்மையுடையவர். நான் மதுரையில் செய்யும் ஒவ்வொரு விரிவுரைக்கும் தவறாமல் வந்து முன்னால் அமர்ந்து சிரித்துக் கொண்டே கேட்டு ரசிப்பார். சிலர் அவரைப்பார்த்து "ஐயா! நீரோ கடவுளை ஒத்துக்கொள்ளாதவர். வாரியார் கடவுள் பற்றுள்ளவர். கடவுளைப்பற்றியே முழுக்க முழுக்கப் பேசும் அவருடைய விரிவுரைகது ஏன் போகின்றீர்;" என்று கேட்டார்கள். ஷண்முகம்பிள்ளை "நான் கடவுள் இல்லை" என்கின்றேன். வாரியார் ஐயா,'உண்டு' என்கிறார். இந்த ஒன்றில் தான் அவருக்கும் எனக்கும் கருத்து வேற்றுமை. அவர் விரிவுரையில் சொல்லுவது அத்தனையும் நமக்கு உடன்பாடுதான். "பொய்சொல்லாதே, களவு செய்யாதே, பிறர் மனைவியை விரும்பாதே, அடுத்தவர்களுக்குத் தீங்கு செய்யாதே, கள் குடியாதே, நயவஞ்சனையாக நடக்காதே" என்று தான் வாரியார் கூறுகிறார். இவை அத்தனையும் எனக்கு உடன்பாடுதானே? வாரியார் மக்களை அறநெறியில் நிற்குமாறு செய்கின்றார். ஒழுக்கத்தை உபதேசிக்கின்றார். அதனால் அவருடைய விரிவுரைக்கு நான் தவறாமல் செல்கின்றேன் என்று பதில் கூறினாராம்.

ஷண்முகம்பிள்ளை அவரது இல்லத்திற்கு என்னை அழைத்து நல்லுணவு தந்து உபசரித்தார். மாதந்தோறும் ஆடி வீதியில் ஒருநாள் இராமாயணமும், ஒருநாள் திருப்புகழ் விரிவுரையும் செய்வேன். இராமாயணவரலாற்றில் இராமர் அத்திரி முனிவரையும், அநசூயா தேவியையும் சந்தித்த பகுதியைச் சொன்னேன். அப்போது அநசூயாதேவி அத்திரி முனிவருக்குப் பாத பூசை செய்ததையும் அந்தப் பாதபூசைத் தீர்த்தத்தால் அயன், அரி, அரன் என்ற மும்மூர்த்திகளையும் குழந்தைகளாகச் செய்து பாலூட்டி, தாலாட்டி, சீராட்டி, பாராட்டி வளர்த்த கற்பின் திறத்தையும் விரிவாக எடுத்து மக்கள் மகிழ மதுரத்தமிழால் பேசினேன்.

எப்பொழுதும் விரிவுரை முடிந்தவுடன் அடுத்த ரயிலில் பிரயாணமாகிப் போவது வழக்கம். அதுபோல் இரவு 11.00மணிக்கு மதுரையை விட்டுப்போய்விட்டேன். அடுத்த மாதம் விரிவுரை செய்யும் பொருட்டு மதுரைக்கு வந்தேன். வழக்கம்போல் முனிசிபல் மனேஜர் லோகநாத பிள்ளை வீட்டில் மேல் மாடியில் தங்கினேன். திரு.ஷண்முகம் பிள்ளையவர்கள் என்னைப் பார்க்க வந்திருந்தார். "ஐயா! வணக்கம் " என்று உரத்த குரலில் கூறி என்னருகில் அமர்ந்தார்.

நான் "வாருங்கள். அம்மாவும் தாங்களும் நலம்தானே? என்று நலம் விசாரித்தேன். அவர் "எல்லாம் நலம் தான் உங்களால் என் மனைவி கெட்டுவிட்டாள்" என்று ஒரு போடு போட்டார். அவர் சொன்ன அந்த வார்த்தை என் தலையில் அணுகுண்டு போட்டதுபோல் இருந்தது. "நாம் என்ன பிழை செய்தோம்? அவருடைய மனைவியார் நம்மால் ஏன் கெட்டார்?" என்று எண்ணி ஆந்தைபோல் விழித்தேன். "ஐயா! நீங்கள் சொல்லுவது எனக்கு விளங்கவில்லை. என்னால் அம்மா ஏன் கெடுகிறார்கள்? நான் எல்லோருக்கும் நல்ல அறிவுரைதானே கூறுகின்றேன்" என்று கூறினேன்.

ஷண்முகம்பிள்ளை 'ஐயா! சென்ற மாதம் நீங்கள் விரிவுரையில் அநசூயாதேவி வரலாற்றைக்கூறி ஒவ்வொரு பெண்களும் தங்கள் கணவனாருக்குப் பாதபூசை செய்ய வேண்டும் அவ்வாறு செய்தால் அப்பெண்களைத் தேவ உலகில் இந்திராணி முதலிய தேவமாதர்கள் பணிவார்கள்"என்று கூறினீர்கள். மறுநாள் அதிகாலை 5 மணிக்கு எழுந்து சாய்வுநாற்காலியில் படுத்து கண்ணை மூடிக் கொண்டிருந்தேன். என் காலில் சில்லென்று தண்ணீர் விழுந்தது . என் கண்ணெதிரில் மஞ்சள் குங்குமத்துடன் நின்று காலின் கீழ் தாம்பாளத்தை வைத்துப் பாதபூசை செய்யத் தொடங்கிய என் மனைவி காட்சியளித்தாள். "இது என்னடி?" என்று நான் உரத்த குரலில் கேட்டேன். அவள் தாரை தாரையாக அழுது கொண்டே "நேற்று மீனாட்சி கோயில் ஆடி வீதியில் வாரியார் சுவாமிகள் கதை சொல்லுகிற பொழுது பெண்கள் தங்கள் கணவனாருக்குப் பாதபூசை செயயவேண்டும் . அப்படிச் செய்தால் எல்லா நலன்களும் பெறுவார்கள்" என்று கூறினாரே! அதனால் தான் தங்களுக்குப் பாதபூசை செய்யத் தொடங்குகிறேன் நீங்கள் வெறுப்புடன் கரடியாகக் கத்துகின்றீரே! இந்த ஜென்மத்தில் எனக்கு உங்களுக்குப் பாதபூசை செய்யும் பாக்கியம் இல்லையா?" என்று கூறி விம்மினாள். அவளுடைய உள்ளத்தின் துடிப்பையும் உணர்ச்சியையும் கண்டு என் மனம் உருகியது.

(தொடரும்)

(6 பக்கத் தொடர்ச்சி.....)

34.கடல் அங்கிகள் பற்றிய கூற்று பின்வருமாறு
A-சீல், கடற்பன்றி, கடல் நாய், நீலத்திமிங்கலம் உண்டு.
B-ஆமை வகையில் திருக்கை ஆமை, பச்சை ஆமை, சீப்பு ஆமையுண்டு.
C-மேலேயுளளவைகளில் A, B மூலையூட்டிகள் ஆகும.
இவற்றுள் சரியானவை.
i.A,B,C ii.A,C iii.B,C iv.A,B

35.வலைகளை உற்பத்தி செய்யும் இடம் பின்வருவனவற்றுள்
i.சீநோர், லுணுவில ii.மட்டக்குளி, காரைநகர்
iii.கொழும்பு, நீர்கொழும்பு iv.நோராட், உலகவங்கி

36.கடற்றொழில் அனுமதிப் பத்திரத்தைப் பெற யாரிடம் விண்ணப்பிக்க வேண்டும?
i.மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலரிடம்
ii.கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திடம்
iii.கடற்றொழில் அமைச்சிடம் iv.நாரா நிறுவனத்திடம்.

37.ஆ[illegible]டின்போது மே - செப்ரெம்பர் மாதங்களில் கிடைக்கும் மழைக்கு வழங்கு[illegible] பெயர்.
i.இடிமின்னல் மழை ii.தென்மேற்குப் பருவக்காற்று மழை
iii.வடகிழக்குப் பருவக்காற்றுமழை iv.உடன்காவுகை மழை

38. கடலின் வெப்பநிலை பற்றிய கூற்றுகள் பின்வருமாறு
A-மேற்படை வெப்பநிலை மாறாது காணப்படும்.
B-கீழ்ப்படை வெப்பநிலை அடிக்கடி மாற்றமடையும்.
C-நடுப்படையில் மீன்களிற்கு ஏற்ற வெப்பநிலை காணப்படுகின்றது.
இவற்றுள் சரியானது.
i.A,B,C ii.A,B மட்டும் iii.A,C மட்டும் iv.Aமட்டும்

39.அருகில் தரப்பட்டிருக்கும் முடிச்சுக்கு வழங்கப்படும் பெயர்



i.தட்டை முடிச்சு ii.ஆங்கில முடிச்சு
iii.போலைன் முடிச்சு
iv.முனை முடிச்சு

40.தட்டை வடிவமுள்ள கடல் மீன்
i.முரல் ii.திருக்கை iii.விலங்கு iv.கீரிமீன்.

**கடல்வாழ் உயிரின வளத் தொழில்நுட்பப் பாட பகுதி II வினாத்தாள் திங்களன்று வெளிவரும்.**

**அன்பு மாணவர்களே!**
**எதிர்வரும் 14.10.2004 அன்று**
**நவராத்திரி பூசை**
**ஆரம்பமாவதையொட்டி**
**'கவிதை மாலை'**

பகுதியை வலம்புரி வெயிடவுள்ளது. மாணவர்களாகிய உங்களின் கவிதையும் இடம்பெறவேண்டுமாயின் நான்கு வரிகளுக்கு மேற்படாத கவிதைகளை ஆக்கி பாடசாலை,கற்கும் தரம், மாணவர் பெயர் ஆகிய விபரங்களுடன்

**"வலம்புரி"**
**இல.15, வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கவும்.

*குறிப்பு:* கவிதைகள் மாணவர்களின் சொந்த ஆக்கமாக இருப்பது அவசியம். (ஆ-ர்)

**விவாத அரங்கு - 6**

விடயம்
**மதுமாற்றத் தடைச் சட்டம்**
**தேவையானதா?**
**தேவையற்றதா?**

நடுவர் : விதுரன்

**உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்**

*அனுப்பவேண்டிய முகவரி*
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# கடவுளது கருணையின் முன்னே கொடுங்கனல் தென்றலாய் குளிரும்

## வெள்ளிநற்சிந்தனை

தருமசேனர் திருநாவுக்கரசர் ஆனதையறிந்து அரசன் ஆத்திரங்கொண்டான். சமண குருமாருடைய புத்திசாதுரியத்தினால் மன்னன் மகேந்திர பல்லவன் மருணீக்கியாரை சுண்ணாம்பு அறையில் அடைக்கும்படி ஏவலாளருக்குக் கட்டளை இட்டான்.



வன்திறன் தண்டலாளர் வாக்கின் மன்னவனாரை அழைத்துச் சென்றார்கள். நீற்றறையில் அடைத்து அரச ஆணையை அமுல் செய்தார்கள். திருநாவுக்கரசர் நீற்றறையினின்றும் தப்பி ஓடிவிடுவாரோ என்று ஐயமும் அச்சமும் கொண்ட சமணர்கள் நீற்றறையின் இரும்புத் தாள்ப்பாள்களை இறுகப் பூட்டினார்கள். சேமம் செய்து காவல் பண்ணினார்கள்.

ஆண்ட அரசு அந்த அறையில் அம்பலத்தே ஆடுகின்ற அருட்பாதங்களை அகத்தில் கொண்டிருந்தார்.

''ஈண்டுவரும் துயருளவோ ஈசனடியார்க்கு'' என்று எண்ணி இன்புற்றிருந்தார்.

வாய்மை திறம்பா வாகீச வேந்தருக்கு வெய்ய நீற்றறை அது தான். வீங்கிள வேனில் பருவத்து தழுவும குளிர் நீர்த் தடாகம் போல் ஐயர் திருவடி நீழல் அருளாகிக் குளிர்ந்தது. நாவரசர் தாம் பெற்ற இன்பத்தை இவ்வுலகம் அனுபவிக்க இன்தமிழாற் பாடினார்.

''மாசில் வீணையு மாலை மதியமும்

வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்

மூசு வண்டறை பொய்கையும் போன்றதே

ஈச னெந்தை இணையடி நீழலே - (நாலாம் திருமுறை) ஓரெழுநாள் கழிந்தது. அரசன் சமணரை அழைத்தான். பல்லவன் அவர்களைப் பார்த்து நீற்றறை இனிப் பாரும் எனப் பகர்ந்தான்.

திருநாவுக்கரசர் சிவானந்தப் பெருக்கில் திளைத்திருந்தார். அம்பலத்தரசினுடைய தேன்பிலிற்றும் திருவடி அழுது அருந்தித் தொழுதிருந்தார். பார் வாழத் திருவீதிப் பணிபுரியும் பண்பாளர்.

சிவசண்முகவடிவேல்

சமணர்கள் திருநாவுக்கரசு நாயனாரைப் பார்த்து இது என்ன அதிசயம் என்று ஆச்சரியத்தில் அழுந்தினார்கள்.

'' அதிசயம் அன்று இது. முன்பு சமண சமயச் சார்பினால் பெற்ற சாதகத்தால் சாவாது பிழைத்திருந்தான்'' என்று அரசன் கோபங்கொள்ளாது சாந்திப் படுத்தினார்கள் சமணர்கள். □

# சுப்பர் மார்க்கெற்றுக்களில் மதுபானம் விற்பனை செய்வதைத் தடைசெய்க!

## ஹெல உறுமய பிரேரணை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

சுப்பர் மார்க்கெற்றுக்களில் மதுபானம் விற்பனை செய்வதற்கென முன்னைய அரசாங்கத்தினால் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட அனுமதிப்பத்திர முறையினை இரத்துச் செய்யும் பிரேரணை ஒன்றை ஜாதிக ஹெல உறுமயக்கட்சி பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பித்துள்ளது.

மத வழிபாட்டிடங்கள், பாடசாலைகள் உட்பட பல முக்கிய இடங்களை அண்மித்த பகுதிகளில் மதுபான விற்பனைகள் இடம் பெறுவதாக இப்பிரேரணையை சமர்ப்பித்த பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரதன தேரர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தல் 2003 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வெளியிடப்பட்டதெனத் தெரிவித்த தேரரால் திகதியை குறிப்பிட முடியவில்லை.

இது விடயம் குறித்துப் பேசிய சபாநாயகர் டபிள்யூ ஜே.எம்.லொக்கு பண்டார, வர்த்தமானி அறிவித்தல் வெளியான சரியான திகதியை தெரிவிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

எனினும், அத்திகதியை உடனடியாகத் தம்மால் தெரிவிக்க முடியாதுள்ளதாகவும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் சரியான திகதியை கூறுவதாகவும் தேரர் தெரிவித்தார். (ரு-7)

# தேசிய ஆலோசனை சபையில் ஐ.தே.க. இணைவது அவசியமானது

## மல்வத்த பீடாதிபதி வலியுறுத்து

(கொழும்பு)

தேசிய ஆலோசனை சபையில் ஐக்கிய தேசியக்கட்சி இணைந்து செயற்படுவது நாட்டின் எதிர்காலத்திற்கும் சமாதானத்திற்கும் அவசியமானதென மல்வத்த பீடாதிபதி சங்கைக்குரிய திப்பட்டுவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்களதேரர் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய ஆலோசனை சபையானது முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சியில் மிகமுக்கிய திருப்புமுனையாகும்.

எனவே, இத்தகைய முக்கியமான தருணத்தில் ஐக்கிய தேசியக்கட்சி தேசிய ஆலோசனைச் சபையில் அங்கம் வகிக்கவேண்டியது அவசியமானது எனவும் மல்வத்த பீடாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (ரு-7)

# வான்தோண்டும் பணிகளுக்கு 524ஆவது படையணி அனுமதி

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை கொத்தியாலடிப் பகுதியில் வான்தோண்டும் பணிகளை மேற்கொள்வதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

மேற்படி பகுதியில் படகுகளைக் கட்டுவதற்கு வசதியாக வான் தோண்டும் பணிகளை மேற்கொள்வதற்கு பொலிகண்டி இராணுவம் முன்னர் அனுமதி மறுத்திருந்தது.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மேற்கொண்ட முயற்சிகளை அடுத்து. இப் பகுதியில் வான்தோண்டுவதற்கு 524ஆவது படையணி கடந்த செவ்வாக்கிழமை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரு-43)

# நீலாவோடை கிராமத்தில் மிதிவெடி அபாயம்

(திருநெல்வேலி)

காரைநகர் நீலாவோடை கிராமத்தில் மக்கள்குடியிருப்புக்களை அண்டிய பகுதிகளில் மிதிவெடி அபாயம உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பகுதியிலுள்ள விவசாய நிலங்கள், தனியார் காணிகள் மற்றும் ஒதுக்குப்புறமான இடங்கள் போன்றவற்றில் மிதிவெடி அபாயம் இருப்பதால் அப்பகுதியில் மீளக்குடியேறு வதற்கு பொதுமக்கள் தரப்பில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், மேற்படி பகுதியில் மீள்குடியேற்றம் தாமதமடைகிறது. எனவே, மிதிவெடி அபாயமுள்ள இடங்களில் இருந்து அவற்றை அகற்றுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனச் சுட்டிக் காட்டப்படுகின்றது. (ரு-43)

# சோனியா காந்தியிடம் தமிழக எம்.பி கள் மனு

தமிழக மேம்பாட்டுக்கான பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்ற ஆவனசெய்யுமாறு ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் சோனியாகாந்தியிடம் தமிழக எம்.பி கள் குழு நேரில் வலியுறுத்தியுள்ளது.

டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் இக் குழு நேற்று முன் தினம் கோரிக்கை மனுவொன்றை அளித்தது. இதைத் தொடர்ந்து சோனியாகாந்தியைச் சந்தித்த இக் குழு 14 பக்கக் கோரிக்கை மனுவொன்றை அவரிடம் அளித்தது. இக் கோரிக்கைகளை பரிசீலித்து ஆவன செய்வதாக சோனியாகாந்தி உறுதியளித்ததாகக் குழுவினர் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

ஜனநாயகக் கூட்டணி எம்.பி.கள் குழுஅளித்த மனுவில் அடிப்படை வசதிகள், குடிநீர் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காகத் தமிழ் நாட்டுக்கு சிறப்பு நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

தமிழகத்தின் முக்கிய நகரங்களில் அகில இந்திய அறிவியல் மருததுவக் கழக மருத்துவ மனைகள் அமைக்கவும், காவிரி நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்பை விரைவில் வழங்கவும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழைச் செம்மொழியாக



அறிவித்ததற்கு நன்றி தெரிவித்தும் தமிழகத்திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தியும் தி.மு.க.தலைவர் கருணாநிதி எழுதிய கடிதத்தையும் அக் குழுவினர் சோனியாகாந்தியிடம் கையளித்தனர். (து)




இந்தியா வந்துள்ள தென்கொரிய அதிபர் ரோஹ் மூஹ்யூனுக்கும் அவரது மனைவிக்கும் நேற்று முன்தினம் குடியரசுத் தலைவர் மாளிகையில் அளிக்கப்பட்ட வரவேற்பு, விருந்துபசார நிகழ்வில் அதிபரையும் அவரது மனைவியையும் வரவேற்கும் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமும் பிரதமர் மன்மோகன் சிங்கும்.

# பகுத்தறிவுப் பணியாற்ற கருணாநிதி அழைப்பு

மூட நம்பிக்கைகளுக்கு இடம் தராமல் தமிழகத்தை விவேகபுரியாக ஆக்கிடும் விஞ்ஞானபூர்மான அணுகுமுறைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டுமென்று சேலம் தி.மு.க.தீர்மானத்தின் அடிப்படையில் பகுத்தறிவுக் கொளகைளைப் பரப்பிடத் தமது பெயரில் தொடங்கப்படும் பகுத்தறிவுப் பாசறை அமைப்புக் குறித்து விடுத்துள்ள அறிக்கையில் கருணாநிதி கேட்டுக்கொண்டிருக்கிறார்.

சாதிமத பேதங்களையும் காட்டுமிராண்டிததனமான நம்பிக்கைகளையும் வளர்ப்போர் தொகை நாளுக்கு நாள் பெருகிவருவதாகவும், இவர்களால் ஆயிரக்கணக்கானோர் ஏமாற்றப் படுவதாகக் குறிப்பிட்ட அவர், இந்தக் காலகட்டத்தில் பகுத்தறிவும் அவசியம் என்றார். (து)

# இந்தியச் செய்திகள்



இன்று புதுடில்லியில் கொண்டாடப்பட வுள்ள இந்திய விமானப்படையின் 72 ஆவது ஆண்டுக் கொண்டாட்டத்தில் இடம் பெறவிருக்கும் நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்கதான விமான சாகசக் காட்சிக்காக ஒத்திகையில் ஈடுபட்டுள்ள ஹெலிகாப்டர்கள் ஒன்றாகக் கிளம்பிப் பிரிந்து செல்லும் காட்சி.

## தமிழக மீனவர்களைக் காப்பாற்ற

# இந்திய கடற்படையில் அதிநவீன வேகக் கப்பல்

இலங்கைக் கடற்படையின் தாக்குதலிலிருந்து தமிழக மீனவர்களைக் காப்பதற்காக இந்திய கடற்படையின் அதிநவீன வேகக் கப்பல் இராமேஸ்வரம் கடற்படையில் நேற்றுமுன்தினத்திலிருந்து ரோந்துப் பணியைத்தொடங்கியது.

இஸ்ரேல் நாட்டிலிருந்து 40 கோடி ரூபாவுக்கு வாங்கப்பட்டுள்ள இந்தக் கப்பல் 24 மணிநேரமும் கடலில் ரோந்துப் பணியை மேற்கொள்ளவுள்ளது. தமிழக மீனவர்களைப் பாதுகாப்பது தான் இக் கப்பலன் முக்கிய பணியென்று அதன கப்ரின் முத்துகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மீனவர்களுக்கு நடுக்கடலில் ஆபத்து ஏற்படும் போது அவர்கள் தகவல தந்தால் இக் கப்பல் விரைந்து சென்று அவர்களுக்குப் பாதுபாப்புத தருமென்று இராமேஸ்வரம்கடற படைக் கொமாண்டர் கூறியுள்ளார்.

தி.மு.க.தலைவர் கருணாநிதி உள்ளிட்டோரின் வேண்டுகோளை ஏற்று மீனவர்களின் பாதுகாப்புக்காக இந்தக் கப்பல் அனுப்பப் பட்டுள்ளது. இதனிடையே இலங்கைக் கடற்படையால் கடந்த திங்கட்கிழமை பிடித்துச் செல்லப் பட்ட 20 மீனவர்களில் 15 பேரை விடுவித்துவிட்டு எஞ்சிய 5 பேரைச் சிறையில் அடைத்திருப்பதைக் கண்டித்து இராமேஸ்வரத்தில் மீனவர்கள் மூன்றாவது நாளாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். (து)

## இன்று ஒரு தகவல்

# ராஜாஜி

ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் நடந்து கொண்டிருந்தகாலம் மூதறிஞர் ராஜாஜி சேலத்தில் வழக்கறிஞராகத் தொழில் புரிந்து கொண்டிருந்தார். அவர் ஒரு சமயம் தன்னிடம் வேலை செய்து கொண்டிருந்த பணியாளர் ஒருவரை அழைத்தார். "இதோ பாரப்பா! இந்த அ[illegible] தலையை இந்த தபால் கவரில் ஒட்டிக் கொண்டு[illegible] என்று சொன்னார்.

அந்த ஆள் உடனே அந்த கவரையும் முத்திரையையும் வாங்கிக் கொண்டு போனார். பசை தடவி முத்திரையை கவரில் ஒட்டினார். திரும்பிக் கொண்டு வந்து ராஜாஜியிடம் கொடுத்தார். ராஜாஜி அதை வாங்கிப் பார்த்ததும் உடனே சிரிக்க ஆரம்பித்து விட்டார்.

அந்தப் பணியாளரைப் பார்த்து " ஏனப்பா! நாங்கள் எல்லோரும் எவ்வளவோ பாடுபட்டு முயற்சித்து போராடிக் கொண்டு வருகிறோம். ஆனால் எங்களால் முடியவில்லை. எங்களால் முடியாத அந்தக் காரியத்தை நீ ஒரு நிமிடத்தில் செய்து முடித்து விட்டாயே" என்று கூறிவிட்டு மீண்டும் சிரித்தார். பணியாளருக்கு ஒன்றும் புரியவில்லை என்னவென்று பார்த்தார். ராஜாஜி கூறினார் " நீ ஒரு நிமிடத்தில் பிரிட்டிஷ் மன்னரைக் கவிழ்த்து விட்டாயே" என்றார். அதன் பின் தான் விடயம் புரிந்தது. அந்தப் பணியாளர் மன்னரின் உருவம் இருந்த அந்தத் தபால் தலையை அந்தக்கவரில் தலை கீழாக ஒட்டியிருந்தார். அதைப் பார்த்து விட்டுத் தான் ராஜாஜி அப்படிச் சொன்னார். இந்த நகைச்சுவை உணர்வு இயல்பாகவே ராஜாஜியிடம் இருந்தது.

சேலத்தில் வெங்கட சுப்பையர் என்று பிரபலமான வக்கீல் ஒருவர் இருந்தார். அவரும் ராஜாஜியும் ஒரு பொதுக் கூட்டத்தை முடித்துக் கொண்டு திரும்பி ரயிலல் சென்னைக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

செங்கட சுப்பையர் ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து பயணித்துக் கொண்டிருந்தார். திடீரென்று ஒரு இடத்தில் அவரது கைக்கடிகாரம் நழுவி ஜன்னல் வழியாக வெளியே வந்துவிட்டது. அவர் உயிருக்குயிராகப் பாதுகாத்து வந்த கைக்கடிகாரம் அது. ஏன் தெரியுமா? அவர் வக்கலாக ஆவதற்கு முன்பு சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்தார். பணி முடிந்து விலகும் போது அவரிடம் படித்த மாணவர்கள் அன்புப் பரிசாக மிகவும் பிரியத்துடன் கொடுத்தது. அப்படிப்பட்ட அன்புப் பரிசை திடீரென்று இழக்க யாருக்குத் தான் மனம் வரும். " ஐயையோ! கைக் கடிகாரம் வெளியே விழுந்துவிட்டதே" என்று சத்தம் போட ஆரம்பித்தார்.

ராஜாஜி இவருக்குப பக்கத்தில் தான் உட்கார்ந்திருந்தா. இருந்தாலும் இதைக் கேட்டு விட்டு பதற்றப் படவில்லை. பதில் எதுவும் சொல்லவில்லை அவர் பாட்டுக்கு எதையோ ஒன்று, இரண்டு, மூன்று என எண்ணிக் கொண்டு வந்தார். வெங்கட சுப்பையர் மிகவும் வேதனைப்பட்டார்."என்ன இது? என்னுடைய அருமையான கைக்கடிகாரம் நழுவி வெளியே விழுந்து விட்டது. அதற்காக நான் தவித்துக் கொண்டுடிருக்கிறேன் நங்கள் கொஞ்சம் கூட அக்கறைப்படாமல குழந்தை போல என்னவோ செய்து கொண்டு வருகிறீர்களே" என்றார்.

அப்போதும் ராஜாஜி ஒன்றும் பதில் பேசவில்லை அவர் பாட்டுக்கு விடாமல் எண்ணிக் கொண்டே வந்தார். அடுத்த ரயில் நிலையத்தில் ரயில் நின்றது. ராஜாஜி நிலையப் பொறுப்பாளரை அழைத்தர். அவரிடம் கூறினார். " சார்! எங்களுக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். நாங்கள் வரும் வழியில் எனது நண்பரின் கைக்கடிகாரம் வெளியே விழுந்து விட்டது. அது விழுந்த இடத்திலிருந்து தந்திக் கம்பங்களை விடாமல் எண்ணிக் கொண்டே வந்திருக்கிறேன். 20 கம்பங்களுக்கு அப்பால் அது கிடக்கும். தயவு செய்து யாரையாவது அனுப்பி அதைத் தேட ஏற்பாடு செய்யுங்கள். அது கிடைத்து விட்டால் எங்களால் முடிந்த அன்பளிப்புத் தருகிறோம். அது கிடைத்துவிட்டால் எங்களுக்கு ஒரு கடிதம் போடுஙகள்" என்று சொல்லி முகவரியையும் கொடுத்தார். சில நாட்களில் கடிகாரமும் கிடைத்துவிட்டது.

இதை ஏன் சொல்கிறேன் என்றால் பதற்றம் அடையக் கூடிய நேரத்தில் கூட அறிவைச் சிதறவிடாமல் செயல்படுத்தும் சாமர்த்தியம் எல்லோருக்கும் சுலபமாக வந்துவிடாது என்பதற்காகத் தான்.

அவரது நகைச்சுவை உணர்வுக்கு இன்னுமோர் உதாரணம.ஒருமுறை அவரைப் பார்க்க ஒரு நண்பர் வந்தார் " என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார் ராஜாஜி. " இப்போது நான் நிறையக் கதை கட்டுரையெல்லாம் எழுதுகிறேன்" என்றார் வந்தவர். "அப்படியென்றால் சாப்பாட்டுக்கு என்ன செய்கிறாய?" என்று கேட்டாராம் ராஜாஜி. இங்கே எழுத்தை நம்பி யாரும் காலம் தள்ள முடியாது என்பதை அவ்வளவு தெளிவாக உணர்ந்து வைத்திருந்தார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புலிகள்-இந்திய அரசுக்கு இடையில் முறுகலை ஏற்படுத்தவே அரசு முனைகிறது

## ம.ம.மு.தலைவர் சுட்டிக்காட்டு


(கொ[illegible]ம்பு)

இந்திய மீனவர்களைக் கைது செய்த ஸ்ரீலங்கா இராணுவம், இந்திய மீனவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சிக்கினால் கொல்லப்படுவார்களென துண்டுப்பிரசுரம் விநியோகித்திருப்பதை தான் வன்மையாகக் கண்டிப்பதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமனற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இரவு மன்னார் [illegible]தற்கு பேசாலைக் கடற்பரப்பில் தொழிலுக்காக வந்த இந்திய[illegible] மீன[illegible]களை ஸ்ரீலங்கா இராணுவம் கைது செய்த போதே மேற்படி துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளை விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் முறுகல் நிலையை ஏற்படுததுவதற்கு ஸ்ரீலங்கா அரசும் இராணுவமும் சேர்ந்து செய்கின்ற பாரிய சதி முயற்சியாகும்.

ஒரு பக்கம் சர்வதேச நாடுகளுக்குத் தம்மை சமா தான விரும்பிகளாகக் காட்டிக் கொள்கின்ற அரசு மறுபக்கம் எல்லா விதத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகளை பலவீனப் படுத்துவதையே தனது நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றது. கருணா விவகாரமும் இதற்கு ஓர் உதாரணமாகும்.



இத்தகைய முயற்சிகளினால் தமிழீழ விடுதலைப் [illegible]லிகளையும் தமிழர்[illegible]ன் அரசியல் சக்தியையும் சிதறடிக்கும முயற்சியில் அரசை வெற்றி பெற தமிழ் மக்கள் வாய்ப்பளிக்கமாட்டார்கள் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் பெ.சந்திரசேகரன் மேலும் தெரிவித்தார் (ற)

# போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கையை மேம்படுத்த நடவடிக்கை

(திருநெல்வேலி)

கடந்த இரு தசாப்த காலமாக இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளினால் யாழ்.மாவட்டத்திலுள்ள பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கென யாழ்.மாவட்ட பெண்கள அபிவிருத்தி நிறுவனத்தால் சேமிப்புத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச் சேமிப்புத் திட்டம் முதற்கட்டமாக வேலணை, கைதடி மற்றும் நாவாந்துறை ஆகிய பகுதிகளில் கடந்தவாரம் ஆரம்பிக்கப்பட்டன. இவ் ஒவ்வொரு பகுதிகளிலிலிருந்தும் தலா 40பெண்கள் இத் திட்டத்திற்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட பெண்கள் அனைவரும் மாதாந்தம் 200 ரூபாவை வங்கியில் வைப்புச்செய்யக் கூடிய வகையில் ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டத்தின் மூலம் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கை மேம்படுத்தப் படவுள்ளது.

பாதிக்கப்பட்ட இவ்வாறான பெண்களின் விடயத்தில இதுவரை முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாத நிலையில், தற்போது பெண்கள் அபிவிருத்தி நிலையம் இந்நடவடிக்கைகளை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-43)

## இராசி பலன்

**08.10.2004**
**(புரட்டாதி 22, வெள்ளிக்கிழமை)**
**நவமி காலை 6.04மணிவரை**
**பூசம் மு.இ 9.38மணிவரை**
**இராகுகாலம் 10.32 -12.02 மணிவரை**
**சுப நேரம் 6.02-7.32 மணிவரை**

**மேடம்**
மனச்சஞ்சலம், ஆரோக்கியக் குறைவு, காரிய தாமதம், பணவிரயம்.

**இடபம்**
சகோதரர் உதவி, பிரயாணநன்மை, தெய்வ தரிசனம், பணவருவாய்.

**மிதுனம்**
வேலைச்சுமை, எடுத்த கருமங்கள் தாமதமாகும், அதிகசெலவு.

**கடகம்**
தெய்வசிந்தை, தேகநலன், கலந்துரையாடல், தொழில்சிந்தை.

**சிங்கம்**
நண்பர்கள் வெறுப்பு, பிரயாண அலைச்சல், சுப செலவு, போசனசுகக் குறைவு.

**கன்னி**
எடுத்த கருமங்கள் கைகூடும், தெய்வதரிசனம், குடும்பமகிழ்ச்சி, பொருள்சேர்க்கை.

**துலாம்**
தொழில்நன்மை, தூரதேசச் செய்தி, புதிய விடயம், கீர்த்தி.

**விருச்சிகம்**
பித்தரோகம், புதியசிந்தை,பிரயாணம், முயற்சி தாமதம்.

**தனுசு**
தர்மம், ரோகபயம், வீண்கலகம, காரிய தடங்கல்.

**மகரம்**
நன்மையான காரியம், நண்பர்கள் சந்திப்பு , பெருமையடைதல், தெய்வதரிசனம்.

**கும்பம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், உடல்நலம், பாராட்டு,தெய்வதரிசனம்.

**மீனம்**
வியாபார விருத்தி, மனச்சோர்வு, அதிக பிரயாசை, பண விரயம்.

*(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)*
*-வளவன்.*

# சிவாஜிலிங்கம் எம்.பி வளலாய் பகுதிக்கு விஜயம்

(திருகோணமலை)

மக்கள் குறை அறியும் முகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை வளலாய்ப் பகுதிக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்தார்.

மேற்படி பகுதியிலுள்ளோரின் வீடுகளில் 5 நாட்களுக்கு மேல் உறவினர்கள் எவரும் வேறு பகுதியிலிருந்து வந்து தங்குவதற்குப் படைத்தரப்பு அனுமதி வழங்காமை மற்றும் உறவினரின் வீடுகளுக்குச் சுதந்திரமாகச் செல்வதற்கு முடியாமை உள்ளிட்ட மேலும் பல பிரச்சினைகள் குறித்து பொது மக்கள் சிவாஜிலிங்கம் எம்.பியிடம் விரிவாக எடுத்துக் கூறினர்.

இதேவேளை, மக்கள் குறை அறிந்து அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் முகமாக கடந்த சில தினங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் வளலாய்ப் பகுதிக்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-43)

# கோப்பாய் தொகுதி அபிவிருத்தி பணிகள் குறித்து விரிவாக ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தொகுதியின் அபிவிருத்தி தொடர்பாகவும் இன்றைய அரசியல் நிலவரம் தொடர்பாகவும்ஆராயும்கூட்டமொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் காரியாலயத்தில் துரைசிங்கம் தலைமயில் நடைபெற்றது.

கோப்பாய் தொகுதியைச் சேர்ந்த 31 கிராமசேவகர் பிரிவுகளில் இருந்தும் சுமார் 70 ற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். வீதிகள், மின்சாரம், கல்வி, சுகாதாரம், முன்பள்ளி, குடி நீர் மற்றும் அதி உயர் பாதுகாப்பு வலய குடியேற்றம், வீட்டு வசதி ஆகிய உள்ளிட்ட மற்றும் பல விடயங்கள் குறித்தும் இதில் ஆராயப்பட்டன.

அபிவிருத்தி, புனர்வாழ்வு போன்ற விடயங்கள் தொடர்பாக பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத்திட்ட நிதியினூடாகவும் ஏனைய வழிமுறைகளினூடாகவும் இதுவரை மேற்கொள்ளபபட்ட பணிகள நடவடிக்கைகள் குறித்து பராளுமன்ற உறுப்பினர் சுரேஷ பிரேமச்சந்திரன் விளக்கிக் கூறினார்.

அத்துடன் இடைக்கால நிர்வாகத்தின் அவசியம், அபிவிருத்தியில் அது ஆற்றக் கூடிய பங்கு, அரசின் இன்றைய போக்குகள் தொடர்பாகவும் அவர் அங்கு விளக்கமளித்தார்.

இதேவேளை, முன்னதாக அராலிமேற்கு, கோட்டை காடு, பைந்தமிழ், முத்தமிழ் கிராமங்கள் காரை நகர் தோப்புக்காடு, உரும்பிராய் கிழக்கு இடைக்காடு, வளலாய் போன்ற கிராமங்களுக்கு விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அங்குள்ள மக்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தமை குறிப்பிடத் தக்கது. (ற)

# கொஞ்சு தமிழில் மிஞ்சி விளையாடிய

## சந்தக் கவிஞன்

**கவிமாமணி பிரம்மஸ்ரீ வீரமணி ஐயரின் முதலாம் ஆண்டு நினைவுதினம் இன்றாகும். அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.**

தமிழ்க் கவிதைக்கு ஒரு கலை ஞன் எனத் திகழ்ந்த கவிமாமணி ம.த.ந.வீரமணி ஐயரை இழந்து இன்றுடன் ஓராண்டு பூர்த்தியடை கின்றது.

**"கற்பனை வளர்தல் வேண்டும் கவிநயம் பிறப்பில் வேண்டும் இப்பெரும் மனிதன்தானே இயற் கையில் கவிஞனாவான''**

என்று கவியர்சன் கண்ண



தாசன் கூறியதைப்போல கவி ரசமும், கலைநயமும் அங்கங் களாக அணிசெய்ய வீரமணி ஐயர் நடைமுறை வாழ்வில் எங்கனுமே காணமுடியாத அளவுக்கு அற்புத மான விவேகத்தையும் கவியாற் றலையும தன்னகததே கொண்டி ருந்தார்.

சிறுவயது முதலே கலையார் வம்கொண்ட இவர் தனது இருபத் திரண்டாவது வயதில் தமிழகம் கலாஷேத்திர நடனப்பள்ளியில் இசை நடனம் பயின்றார். அங்கே கலைஞர் அருண்டேல் ருக்குமணி அம்மையாருடைய அபிமான மாணவனாக சகல திறமைகளை யும் கொண்டு கற்றுத்தேறி தாய கம் திரும்பிய இவர், தான் கல்வி கற்ற மானிப்பாய் இந்துக்கல்லூரி யில் ஆசிரியராகவும் பலாலி, கோப் பாய் ஆசிரியர் பயிற்சிக் கலா சாலைகளில் முப்பத்திமூன்று வருடங்கள் விரிவுரையாளராகவும் பணியாற்றினார். கோப்பாய் ஆசிரி யர் பயிற்சிக் கலாசாலையில் இவர் 'ஸாஹித்ய ஸாஹரம்' என்ற சிறப் புப்பட்டம் வழங்கிக் கௌரவிக் கப்பட்டார்.

கொடுத்த தலைப்பில் நினைத்த வுடனே கவிபாடும் ஆற்றல் கைவ ரப்பெறற ஒரு 'வரகவி' யான இவா கொஞ்சுதமிழில் மிஞ்சிவிளையாடி சந்தக் கவியின் சொந்தக்காரர் ஆவார். அவருடைய கவிப்படைப் புக்கள் முறறுமுழுதாக மரபு தழுவியனவாகவும் சந்தம் கொஞ்சி விளையாடும் தன்மையுடையதாக வும் நவரசம் ததும்புவனவாகவும் விளங்கின.

இவருடைய 'கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்' என்று ஆரம்பிக்கும் ஆனந்த பைரவி இரா கத்தை பல்லவியில் கொண்ட மைந்து நான்கு இராகங்கள் முத் திரை அமைக்கப்பெற்ற இராக மாளிகை கீர்த்தனை ரி.எம்.சௌந் தரராஜன அவர்களால் பாடப் பெற்று உலகப் பிரசித்திபெற்ற தாகும். இந்தியாவில் சௌந்தர ராஜன் அளித்த மிக முக்கிய பேட்டி ஒன்றில் தான் பாடிய பாடல்கள் அனைத்துக்குள்ளும் உள்ளம் உருகிப் பாடிய பாடல் யாழ்ப்பாணம் வீரமணி ஐயரது இப் பாடல்தான் என்று கூறியுள் ளார். திருமைலாப்பூர் கபாலீஸ் வரர் ஆலயத்தின் உட்சுவரில் இப் பாடல் இப்போதும் காணப் படுகின்றது.

யாழ்ப்பாணத்திற்கு இசைக் கச்சேரிகளிற்கென சௌந்தரராஜன் வரும்போதெல்லாம் ஐயாவைச் செனறு சந்திக்கத் தவறுவதில்லை. ஒருமுறை யாழ்ப்பாணம் சுட்டிபுரம் சிவகாமி அம்மன் ஆலயத்திற்கு கச்சேரிக்காக வந்திருந்தபோது ரி.எம்.எஸ், வீரமணி ஐயாவிடம் வந்து அவரையும் அழைத்துச் சென்றுகொண்டிருந்தார். அந்தவேளை யில் கோயிலை அண்மித்த நிலையில் பட்டிமாடுகள் கூட்டம் அவர்கள் சென்ற வாகனத்திற்குக் குறுக்கே வந்து பயணத்தைத் தடைசெய்தது. அப்போது அவ்வி யற்கை நிகழ்வைக் கண்ணுற்ற வீரமணி ஐயர்,

**"பட்டிப்பசு இனங்கள் எல்லாம் பாலாபிஷேகம் செய்யும் சுட்டிபுரம் வாழும் சிவகாம சுந்தரியே கட்டியுந்தன் கால் பிடித்தேன் கரு ணைக் கண்ணால் பாருமம்மா..."**

என்ற வரிகள் அடங்கிய பாடலை வாகனத்தில் இருந்தவாறே இயற் றிக்கொடுத்தார். அப்பாடலை ரி.எம்.எஸ் அவர்கள் அக் கச்சேரி யில் பாடி பெரு வரவேற்புக் கிடைக் கப்பெற்றார்.

1957ஆம் ஆண்டு 'திருமயி லைக் குறவஞ்சி' என்ற கலை நூலை வெளியிட்டு பெருமதிப்புக் கிடைக்கப்பெற்றதுடன், 1965ஆம் ஆண்டு நல்லை ஆதீன சஞ்சிகை யான அருளமுதத்தில்,

**"சாரங்கன் மருகனே சாவேரி பாலகனே மேகனே குமரனே நாயகி நாயகனே"**

என்ற பல்லவியைக் கொண்ட 16 இராகங்களில் அமைந்த இராக மாளிகைக் கீர்த்தனையை வெளி யிட்டு பெரும் புகழ் கிடைக்கப் பெற்றார். 1978ஆம் ஆண்டு மலே சியா கோலாலம்பூரில் SCOT ROAD கந்தசுவாமிகோயில் கும்பாபிஷேகத்தில் கலாபூசணம் தாவடியூர் கே.எஸ்.ஆர்.திருஞான சம்பந்தப்பிள்ளை பாட இருந்தத [illegible] வைத்தே பாடல் இயற்றிக் கொடுத திருந்தார். அப்பாடல் மலேசியாவில் பெரு வரவேற்பைப் பெற்றிருந்தது.

1982ஆம் ஆண்டு வட இலங்கை சங்கீதசபை பொன் விழாவில் "கவிமாமணி" என்ற சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டார்.

இயல், இசையில் இவருக்கு இருந்த மேன்மையால் இயலிசை வாரிதி, மகாவித்துவான் என்ற சிறப்பு விருதுகள் வழங்கி பாராட் டப்பெற்றார். 1999ஆம் ஆண்டு அக்டோபர் ஆறாம் நாள் யாழ். பல் கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கௌரவ முதுமாணிப் பட்டம்வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

நடனத்துறை, கவித்துறையில் மட்டுமன்றி இசைத்துறையிலும் பாண்டித்தியம் பெற்றிருந்த கவி மாமணி 72 மேளகர்த்தா இராகங் களிற்கும் 175 தாளங்களிற்கும இன்னும் இதற்கு மேலாகவும் உருப்படிகளை ஆக்கியுள்ளார். பல இராகங்களின் பெயர்களை முத்திரை அமைத்துப் பாடியுள் ளமை இவருடைய ஆக்கங்களின் சிறப்பம்சமாகும். கீதம், கீர்த்தனை, பதம், பலலவி, வெண்பா முதலிய சகல வகை பாடல் துறைகளிலும கவிபாடும் ஆற்றல் கைவரப் பெற்ற வீரமணி ஐயர் எல்லா வகை களிலும் கலைப்படைப்புக்களை இவ்வுலகிற்கு விட்டுச் சென்றிருக் கிறார். கர்நாடகஇசை, நடனம் ஆகிய இரண்டிலும் டிப்ளோமா தகைமைகளைப் பெற்றிருந்த வீரமணி ஐயர் தனது அரச பணி யின் நிறைவில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இராம நாதன் நுண் கலைப் பீடத்தில் வருகை விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

தமிழிசை வரலாற்றில் தமிழுல கமே ஏற்றுக்கொண்ட மஹாவித் வான் வீரமணி ஐயர் ஈழத்தின் ஒரு பெரும் சொத்தவார். கவித்துறையில் யாரும் நெருங்கமுடியாத அளவுக்கு உன்னதமான படைப்புக்களைப் படைத்த பெரும் படைப்பாளியவார். பூவுலகில் அவருடைய படைப்பாற் றலைப் பொறுக்கவில்லைப் போலும். 2003ஆம் ஆண்டு அக்டோபர் 8ஆம் நாள் காலையிலே நாம் காண அவ ருயிரைத் தனதாக்கிக்கொண்டார். ஈழம் மட்டுமல்ல தமிழுலகமே கண்ணீர் சிந்த ஸஹிருதய பெருஞ் சைலம் சரிந்தது.

மஹாவித்துவானுடைய ஆத்மா எல்லாம்வல்ல சிவகாமி சமேத சிதம்பரேசன் பதமடைந்து பேரின் பப் பெருவாழ்வு பெற இறைவனைப பிரார்த்திப்போமாக. □

**கு.புரந்தரன்**

### முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு விழா

வவுனியா மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவிக்கும் விழா வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ் வுக்கழகம், நெடுங்கேணி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம், வவுனியா அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் மற்றும் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம ஆகியவற்றின் அனுசரணை யுடன் நெடுங்கேணி மகா வித்தியால யத்தில் கடந்த 6ஆம் திகதி நடை பெற்றது. (ற)

### சாரணர் பாசறை

காங்கேசன்துறை மாவட்டச் சாரணா கிளைச் சங்கம் நடாத்தும் 24 ஆவது வருடாந்த சாரணர் பாசறை விழாவும், குருளைச் சாரணர் வெளிக்கள நாளும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிவரை நடைபெறவுள ளன. (ற)

### கடைத்தொகுதி திறப்பு விழா

யாழ்.மாநகரசபையினால் நல் லூர் செங்குந்தா பொதுச்சந்தை யில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கடைத்தொகுதி எதிர்வரும் 15ஆம திகதி நண்பகல் 12மணிக்கு யாழ. மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத் மநாதனால் வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் முன்னாள் முதல் வர்கள், முன்னாள் மாநகரசபை ஆணையாளர்கள், விடுதலைப்புலி களின் முக்கிய பிரமுகர்கள் மற் றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகி யோர் கலந்துகொள்ளவுள்ளனர்.(ற-5)

### மரம் நாட்டு விழா

கரவெட்டி சமுர்த்தி உத்தியோ கத்தர் காரியாலயம் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் அனுசரணையுடன் வன பரிபாலன திணைக்களத்தில் இருந்து ஆயி ரத்து 350 பயன்தரு மரக்கன்றுகளைப் பெற்று பொது ஸ்தாபனங்களுக்கு வழங்கவுள்ளது.

இதன்படி ஆரம்ப நிகழ்வாக உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல் லூரியில எதிர்வரும் 17ஆம் திகதி மரம் நாட்டு நிகழ்வு வைபவ ரீதி யாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை செயலாளர் ஏ.எம். ஜோசப்பினால் ஆரம்பித்துவைக் கப்படவுள்ளது. (ற-101)

# முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டைக் கண்டித்து மீளக்குடியேறிய முஸ்லிம் சமூகம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்தகால இடபபெயர்வுக்குப் பின்னர் யாழ்.மாவட்டத்தில் மீளக் குடியேறி நிம்மதியாக வழ்ந்து கொண்டிருக்கும் நிலையில், தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் ஒற்றுமையைச் சீரழிக்கும் வகை யில் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் காங்கிரஸ் மாநாடொன்றை நடாத தப்படுவதைத் தாம் வனமையாகக் கண்டிப்பதாக மீளக்குடியமர்ந்த யாழ்.முஸ்லிம் சமூகம் அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்தில் நடை பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டைக் கண்டித்து, 'எங்கள் அமைதியான வாழ்வைக் குலைக்க வேண்டாம்' எனும் தலைப்பில் வெளியிடப்பட் டுள்ள மேற்படி அறிக்கையில்,

தவிர்கக முடியாத இடம்பெயர்வு வாழ்வில் நாங்கள் சந்தித்த அவ லங்கள் கொஞ்சமல்ல. அகதிக ளாக... அநாதைகளாக அல்லல் பட்ட நாஙகள், அண்மையில் தான் ஊருக்குத் திரும்பி ஓரளவும் நிம் மதியாக வாழத்தொடங்கியிருக் கின்றோம்.

வீடுவாசல்களை மீளப் புனர மைத்தும், தொழில்களைத் தொடங் கியும் தமிழ்ச் சகோதரர்களோடு ஒற்றுமையாக வாழும் இந்தவேளை யில் ஒக்டோபர் 10ஆம் திகதி யாழ்ப பாணத்தில் முஸ்லிம் காங்கிரஸ் மாநாடு நடைபெறவுள்ளதெனற செய்தியைக் கேட்டு அதிர்ச்சியும், மனக்கலக்கமும் அடைகின்றோம்.

தமிழ் மக்களின் போராட்டம் பற்றியும் தமிழீழ விடுதலைப்புலி கள் பற்றியும் நேரமொருவிதமாக விமர்சிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இதுபோன்ற மாநாடு களை எங்கள் மத்தியில் நடாத்தி எங்களின் இன்றைய அமைதி வாழ்வினைக் குலைக்கவேண்டா மென மிகவும் விநயமாக வேண் டுகின்றோம்.

தமிழ்ச் சகோதரர்களுக்கும எமக் குமிடையில் மனதில்கூட ஒரு இடை வெளி ஏற்படவில்லை. மாநாடு என்ற போர்வையில் மௌலி சுபி யான் இவ்வாறான இன ஒற்றுமை களை சீரழிக்கும் செயற்பாடுக ளில் ஈடுபடுவதை நாம் வன்மை யாகக் கண்டிக்கின்றோம்.

இதுபோன்ற செயற்பாடுகளை இனிமேலாவது கைவிட்டு உருப் படியான வழிகளில் எங்கள் உரி மைகளைப் பெறுவதற்கு உண்மை- விசுவாசத்துடன் உழைத்திடுங்கள். எங்கள் வேண்டுதலைப் புறக் கணித்து மாநாட்டினை நடத்த முற் படுமிடத்து, எங்கள் எதிர்ப்பினை நேரடியாகவே காட்ட நேரிடும் என் பதைத் தெரிவிப்பதோடு மாநாட் டையும் பகிஷ்கரிப்போம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# மட்டு.கிராம உத்தியோகத்தர் மீது பௌத்த பிக்கு குடையால் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொலிஸ் நிலை யத்தில் வைத்து கிராமசேவை உத்தியோகத்தர் ஒருவர் பௌத்த பிக்கு ஒருவரால் தாக்கப்பட்டுள் ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர் பாக மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகரிடம் மட்டக்களப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். ஜெயானந்தமூர்த்தி, பா.அரிய நேநதிரன் ஆகியோர் கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்துள் ளனர்.

மட்டக்களப்பு நகரிலுள்ள இரு தயபுரத்தில் வீதி அபிவிருத்தி வேலை ஒன்றில் பொதுமக்கள் ஈடுபட்டிருந்த போது அது தமது காணிக்குள் உட்படுவதாகக் கூறி அப்பகுதியைச் சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர் மட்டக்களப்புப் பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்தி ருந்தார்.

இது தொடர்பாக மட்டக்களப்பு பொலிஸ நிலையத்தில் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஆத்திரமடைந்த பிக்கு தான் வைத திருந்த குடையால் பொலிஸாருக்கு முன்னால் கிராமசேவையாளரான விஜயரெட்ணம் என்பவரை தாறு மாறாகத் தாக்கியுள்ளார்.

இதனையடுத்து விசாரணை எதுவும் நடைபெறவில்லை. இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப் பினர்களான எஸ்.ஜெயானந்த மூர்த்தி, பா.அரியநேந்திரன் ஆகி யோரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து அவர்கள் அரச அதிபர் வி. சண்முகம், பிரதேச செயலாளர் கே.கதிர்காம நாதன் ஆகியோரிடமும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் தமது கடும் ஆட்சேபனையைத் தெரிவித் துள்ளனர்.

வடக்குக் கிழக்கு தமிழர் தாயகமான இதில் எந்தவித பேரினவாத சக்திகளும் தலையிட முடியாது. பேரினவாத சக்திகளோ, பௌத்த பிக்குகளோ தமது வன் முறைகளை தெரிவிப்பதானால் தென்பகுதியில் மட்டும் வைத்துக் கொள்ள வேண்டும் எனவும் நாடாளு மன்ற உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ற)

# தென்கொரிய உயரதிகாரிகள் யாழ்.தொ.நு.கல்லூரிக்கு விஜயம்

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி யில் தென்கொரிய அரசாங்கத்தின நிதி உதவியுடன் புதிய தொழில் நுட்பப்பணிகளை மேற்கொள்வதற காக எதிர்வரும் 12ஆம் திகதி காலை 9.00மணிக்கு இலங்கைக்கான தென கொரிய வதிவிடப்பிரதிநிதி 'கிம் வைங்குவாங்' தலைமையில் 4 தொழில்நுட்ப வல்லுநர்களும், 2 பொறியியலாளாகளும் யாழ்.தொழில நுட்பக் கல்லூரிக்கு வருகைதரவுளள னர். இவர்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு வாரம் தங்கியிருந்து புதிதாகக் கட் டப்படவுள்ள கட்டடத்திற்கான திட் டஙகளையும் மாதிரி வரைபடங்களை யும் ஆராயவுள்ளனர். இதற்கு தென் கொரிய அரசாங்கம் 2.3 மிலலியன அமெரிக்கடொலர் நிதியை வழங்க வுள்ளதுடன் இதற்கென இலங்கை அரசாங்கமும் 7.3மில்லியன் ரூபா நிதி யினை வழங்கவுள்ளது. இதற்கு அமைச் சரவையின் அங்கீகாரமும் கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ்.தொழில நுட்பக் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.(ற-5)





கைதடி அரச சிறுவர் இல்லத்திற்கான புதிய கட்டடத் திறபபு விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சிப பிரதேச செயலர் திரு.செ.ஸ்ரீநிவாசன் மங்கள விளக்கேற்றுவதையும், சமூக நலத்துறைத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி.என்.ரஞ்சினி வைபவ ரீதியாக நாடாவெட்டிப் புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பதனை யும் படங்களில் காணலாம். படங்கள்:- ஞா.ஐங்கரன்.

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல் - குறள்

வலம்புரி

## ஈழத் தமிழர்களுக்காக தி.மு.க. என்ன செய்கிறது?

இலங்கை இன ர்ச்சினைக்கு தீர்வு காணும் விடயம் அமுங்கிப்போயுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் எதனையும் ஆரம்பிக்காது காலம் கடத்துகிறார். கண்துடைப்பு நடவடிக்கையாக தேசிய ஆலோசனைச் சபை என்ற ஒன்றை உருவாக்கினார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் எந்தப் பயனையும் ஏற்படுத்தாத அமைப்புக்களை உருவாக்குவதன் மூலம் அவர் மீண்டும் ஓர் யுத்தத்திற்கே வழி கோலுகின்றார் என்பது தெளிவு.

இவ்வாறு இலங்கை நிலைமை இருக்கும்போது இந்தியா மௌனம் சாதிப்பது வேடிக்கையாகவும், வேதனையாகவும் உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்றபோது பல்வேறு விடயங்களில் தலையிட்ட இந்தியா, பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பிதம் அடைந்திருக்கின்ற வேளையில் மௌனம் சாதிக்கின்றது.

அரசு - புலிகளுக்கு இடையில் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சி செய்யும் நோர்வே அரசு தனது அனுசரணை முயற்சிக்கு இந்தியாவின் ஒத்துழைப்பை பெற்றுவிட பகீரதப் பிரயத்தனம் செய்கின்றது.

இருந்தும் இந்தியாவின் இரட்டை வேடத்தை நோர்வேயால் புரிந்துகொள்ளமுடியாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நோர்வே அரசு இந்தியாவிடம் கேட்கும்போது அதற்கு சம்மதம் தெரிவிக்கும் அந் நாடு, உள்ளூர சமாதானத்திற்கு எதிரான நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வருகின்றது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது அந்தப் பேச்சுக்களை குழப்பும் நோக்கில் இந்திய கடற்படை செயற்பட்டது. கடற்படை தளபதி இலங்கைக்கு வருகை தந்து இலங்கை கடற்படையை உசார் படுத்தினார். அதற்கு மேலாக அவ்வப்போது குட்டையைக் குழப்பும் நோக்கில், விடுதலைப் புலிகள் ஆயுதம் கடத்துகிறார்கள் என்ற செய்தியையும் போட்டு வைத்தார். இவை சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்றபோது கூறப்பட்ட விடயங்கள்.

ஆனால் இப்போது பேச்சுக்கள் முடங்கியிருப்பதால் இந்தியா ஆறுதல் அடைந்துள்ளது. அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் நடைபெற்றபோது பாரதீய ஜனதாக் கட்சியே ஆட்சியில் இருந்தது.

ஆனால் இப்போது இந்தியக் காங்கிரஸ் ஆட்சியில் அமர்ந்துள்ளது. மத்திய ஆட்சியில் காங்கிரஸ் இருப்பதற்கு கலைஞர் கருணாநிதியின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகமே காரணம் எனலாம். கலைஞரின் தி.மு.கவுடன் வை. கோபாலசாமி, டாக்டர். ராமதாஸ், ப. நெடுமாறன் போன்றவர்களும் இணைந்தே மத்திய அரசுக்கு ஆதரவளிக்கின்றனர்.

இங்கு வை. கோபர்லசாமி, டாக்டர் ராமதாஸ், ப. நெடுமாறன் போன்றவர்கள் ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பவர்கள்.

ஈழத் தமிழர்களுக்காக - விடுதலைப் புலிகளுக்காக பேசினார்கள் என்பதால் அவர்கள் சிறைவாசம் அனுபவித்ததுமுண்டு. இவ்வாறு ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுத்தவர்களின் ஆதரவுடன் மத்திய அரசு இயங்கும் போது அந்த அரசின் ஊடாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடலாம் அல்லவா?

ஆனால் அந்த நடவடிக்கை எதிலும் அவர்கள் ஈடுபடுவதாகத் தெரியவில்லை. ஆக எல்லாம் சந்தர்ப்பவாதம் தானா!

---

### வட- கிழக்கு பகுதிகளிலுள்ள

# சேதமடைந்த தேவாலயங்களைப் புனரமைக்க ஜனாதிபதி 50 இலட்சம் ரூபா நிதிஒதுக்கீடு

(கொழும்பு)

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளால் சேதமடைந்துள்ள வடக்கு-கிழக்குப பகுதியிலுள்ள கிறிஸதவ தேவாலயங்களைப் புனரமைப்பதற்கென ஜனாதிபதி 50 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

கிறிஸ்தவ விவகார அலுவல்கள் அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோவின் வேண்டுகோளுக்கு அமைய வடக்கு- கிழக்கிலுள்ள சேதமடைந்த கிறிஸ்தவத் தேவாலயங்களைப் புனரமைப்பதற்கு ஜனாதிபதி இந்நிதியை வழங்கியுள்ளார்.

இந்நிதியின் மூலம் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களிலுள்ள சேதமடைந்த கிறிஸ்தவத் தேவாலயங்கள் முதற்கட்டமாகப் புனரமைக்கப்படுமென அமைச்சர் மிலறோய் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

வட பகுதிக்கு அண்மையில் விஜயம் செய்தபோது அமைச்சர் சேதமடைந்த தேவாலயங்களைப் பார்வையிடடதுடன், இவற்றைப் புனரமைப்புச் செய்வதற்குத் தேவையான நிதி விபரங்களையும் மதிப்பீடு செய்திருந்தார். இதற்கமைவாகவே, ஜனாதிபதியிடம் இந்த வேண்டுகோளை அவர் விடுத்திருந்தார்.

இதேவேளை, மடுத் தேவாலயமும விரைவில் அபிவிருத்தி செய்யப்படுமெனவும் அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ மேலும் உறுதியளித்துள்ளார். (ற)

# இதழியல் டிப்ளோமா கற்கைநெறி நாளை முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யுனெஸ்கோ அனுசரணை யுடனும் டென்மார்க் அரசின் நிதியுத வியுடனும் யாழ். பல்கலைக் கழ கத்தில் நிறுவப்பட்டுள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் சார்பில் யாழ்ப்பாணத்துப் பத்திரிகையாளர்களுக்காகத் திட்டமிடப்பட்டுள்ள இதழியல் டிப்ளோமா கற்கைநெறி எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம் பமாகவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் இதனைத் தொடக்கி வைப் பார். இலங்கையின் மூத்த தமிழ்ப் பேரறிஞர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி தொடக்கவுரை நிகழ்த் துவார்.

ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையம் சிற்றிஹோலில் யாழ்.பத்திரிகையாளர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சி வழங்கல், தேவையான வளங்களைத் தொகுத்து வழங்கல் ஆகிய நோக் கங்களுடன் இயங்கி வருகிறது. இதழியல் டிப்ளோமா கற்கைநெறிக் கான பாடத்திட்டங்கள் நிபுணர் களின் துணையுடன் தயாரிக்கப் பட்டு யாழ். பல்கலைக்கழக மூதவையின் ஒப்புதலும் அதற்குப் பெறப்பட்டுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகி 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம்வரை இந்த இதழியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான வகுப்புகள் நடைபெறவுள்ளன.

பத்திரிகையாளர்களின் வச திக்கேற்ப சனி மற்றும் ஞாயிறு ஆகய தினங்களில் இந்த வகுப் புகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. இந்த கற்கை நெறிக்கான வகுப் புகளை நடாத்த கொழும்பில் இருந்தும், தென்னிந்தியாவில் இருந்தும் மூத்த பத்திரிகையாளர் களும் பத்திரிகை கல்வியாளர்க ளும் வரவழைக்கப்படவுள்ளனர்.

இந்த டிப்ளோமாவில் பயில் வதற்கென வட இலங்கையைச் சேர்நத பத்திரிகைத் துறையோடு தொடர்புடைய 20 பேர் தெரிவு செய் யப்படடுள்ளனர். இவர்கள் கற் றுக்கொண்ட விடயங்களுடன கொழும்பு மற்றும் தென்னிந்திய நகரங்களில் இருந்து வெளியா கும் பத்திரிகை நிறுவனங்களில் நேரடியாகச் சென்று பயிற்சி பெறவும் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன் இவர்களின் முயற் சியில் பயிற்சிப் பத்திரிகை ஒன்று வெளியிடவும் ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன.

நவீன இதழியலின் அனைத்து விடயங்களையும் கற்ற றியும் வாய்ப்பு இவர்களுக்குக் கிடைக் கும். இதேவேளை, இப் பயிற்சி பெறுவோருக்கு பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத் தாபன மூத்த ஊடகவியலாளர்களும் பயிற் சியளிக்கவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ற)

# திருகோணமலையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன

(திருகோணமலை)

திருகோணமலையில் இராணுவம் மற்றும் பொலிஸாரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளினால் தடுத்துவைக்கப்பட்டுள்ள இரு ஊர்காவல்படையினரையும் விடுதலை செய்யுமாறு கோரி திருகோணமலை மணிக்கூட்டுக்கோபுரம் முன்பாக அவர்களது உறவினர்கள் தொடர்ந்தும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த 23ஆம் திகதி திருகோணமலைக்கு விஜயம செய்த அமைச்சர் மங்களசமரவீர தலைமையிலான குழுவினர் ஊர்காவல்படையினர் இருவரினதும் விடுதலைக்கு உறவினர்களிடம் 14 நாட்கள் கால அவகாசம் கோரியிருந்தனர்.

எனினும் மேற்படி கால அவகாசம் முடிவடைந்த போதிலும் ஊர்காவல்படையினரின் விடுதலை தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இது குறித்து விசனம் வெளியிட்டுள்ள உண்ணா விரதிகள் திருகோணமலையில் அசம்பாவிதச் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் என்ற ஐயத்தின் காரணத்தினாலேயே நகரின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## வெடிவிபத்தில் காயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிமன்றத்தில் தவறுதலாக ஏற்பட்ட வெடி வபத் தொன்றில் அங்கு கடமையில் இருந்த பொலிஸ உத்தியோகத் தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கடந்த 2 ஆம் திகதி இடம் பெற்ற இச்சம்பவத்தில் றுவான் மித்திரா (வயது23) என்ற பொலிஸ உத்தியோகத்தரே காயமடைந்த வராவார். (ப-127)

### சுய தொழில் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ்

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள கடந்தகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் விதவைப் பெண்களுக்கு அமெரிக்க உதவி நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். சமூகச் செயற்பாட்டு மையம் சுயதொழில் வேலைவாய்ப்புக்கான உபகரணங்களை வழங்கவுள்ளது.

இதற்கமைய யுத்தத்தினால் பாதிக்கப்பட்டதாக இனங்காணப்பட்ட 23 பெண்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். சமூகச் செயற்பாட்டு மையத்தில் தையல் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் பிரதமவிருந்தினராகவும், யு. என. எச். சி. ஆர். நிறுவனப் பிரதிநிதி கே. மோறாட்டோ கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமெரிக்க உதவி நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். சமூக செயற்பாட்டு மையம் பல்வேறு உதவி வழங்கும் செயற் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

# சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைப்போருக்கு சன்மானம்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

உள்நாட்டில் சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் அதனைக் கையளிப்பதற்காக இரண்டு மாத கால அவகாசம் வழங்கியுள்ள இலங்கை அரசாங்கம் இதனை ஊக்குவிப்பதற்காக சன்மானம் வழங்குவதாகவும் அறிவித்துள்ளது.

பாதுகாப்பு மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் கணிப்பீட்டின் படி உள்நாட்டில் சுமாா 50 ஆயிரம் சட்ட விரோத ஆயுதங்கள் இருப்பதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

இன்று பாதுகாப்பு அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையின்படி கடந்த முதலாம் திகதி முதல் எதிாவரும் நவம்பர் 30 ஆம் திகதி வரை சட்டவிரோத ஆயுதங்கள் வைத்திருப்பவர்களுக்குப் பொது மன்னிப்பு காலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இக் காலப் பகுதியில் ஆயுதங்களை ஒப்படைப்பவர்களில் ரி 56 ரக துப்பாக்கிக்கு - ரூபா 50 ஆயிரம் கைத்துப்பாக்கி மற்றும் ாிவோல்வருக்கு - ரூபா 15 ஆயிரம்,303 ரகதுப்பாக்கிக்கு- ரூபா 30 ஆயிரம்,தன்னியக்க துப்பாக்கிக்கு ரூபா 25 ஆயிரம், கைக் குண்டுக்கு - ரூபா 5 ஆயிரம் என ஒவ்வொன்றிற்கும சனமானம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-8)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

சுற்றியுள்ள இயற்கை நம்மை அழுத்தி வைக்க முயல்கிறது. அதை மீறி ஆன்மா தன்னை வெளிப்படுத்திக்கொள்ள விரும்புகிறது. இயற்கையுடனான போராட்டம் தொடர்ந்த வண்ணமே உள்ளது. சுதந்திரத்திற்கான இந்தப் போராட்டத்தில் எத்தனையோ பொருட்கள் நசுக்கப்படும். உடைக்கப்படும். அது தான் உங்கள் உண்மைத் துன்பம்.

சுவாமி விவேகானந்தர்

## கைக்குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கல்முனை வீதி கல்லாறு எனுமிடத்தில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற கைக்குண்டு வீச்சு சம்பவத்தில் குடும்பஸ்தரொருவர் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச்சேர்ந்த நாகப்பன் பாஸ்கரலிங்கம் (வயது 54)என்ற குடும்பஸ்தரே காயமடைந்தவராவார். பிரஸ்தாப நபர் வீதியால் சென்றுகொண்டிருந்த சமயம் இனந்தெரியாதவர்களினால் இக் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## புங்குடுதீவில் மினிபஸ் விபத்துக்குள்ளானது

(புங்குடுதீவு)

குறிகாட்டுவானிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாகவுள்ள வேலியுடன் மோதியது.

நேற்றுக் காலை புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் தெய்வாதீனமாகப் பயணிகள் எவருக்கும் எதுவித காயமும் ஏற்படவில்லை. எனினும் மினிபஸ் சிறிது சேதத்திற்குள்ளாகியது. (ற-126)

### சமாதானப்...

கருத்துக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடுகளை ஒத்திருக்கின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஒஸ்லோ மற்றும் டோக்கியோ பிரகடனங்களின் அடிப்படையிலேயே ஆரம்பிக்கப்படவேண்டும். இந்த நிலைப்பாட்டினை ஐக்கிய தேசியக் கட்சியும் ஏற்றுக்கொண்டிருக்கின்றது.

ஒஸ்லோ பிரகடனம் வெளியிடப்பட்ட மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அப்போது பிரதமர் ஸ்தானத்தில் கலந்துகொண்டார். விடுதலைப் புலிகளின் பிரமுகர்களும் அதில் கலந்துகொண்டனர்.

இப் பிரகடனத்தின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் ஒஸ்லோ மற்றும் டோக்கியோ பிரகடனங்களின் அடிப்படையில ஜனாதிபதி பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க வேண்டும். இல்லையேல் அரசாங்கத்திற்குள் நிலவும் முரண்பாடுகளே பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க முடியாமைக்கான காரணம் என ஊகிக்க நேரிடும். அதே சமயம் வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பினால் அரசாங்க ஊழியர் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

அதற்கேற்ப அவர்களின் சம்பளத்தினை 70 சதவீதத்தினால் அதிகரிக்கவேண்டும். அதேவேளை வேலையற்றவர்களுக்கும் நிவாரணம் அளிக்கப்படவேண்டும்.

கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்களுக்கு வரி விதிக்கப்படவேண்டும் என அரசாங்கம் தீர்மானம் எடுத்திருக்கின்றது. இதனால் பொருட்களின் விலை அதிகரிப்பு ஏற்பட வழிசமைக்கும்.

எனவே தலைநகருக்குள் நுழையும் வாகனங்களுக்கான வரி அறவிடும் திட்டத்தை அரசு உடன் கைவிடவேண்டும் இவ்வாறு ஜி.எல். பீரிஸ் மேலும் தெரிவித்தார். (த-121)

### பெற்றோல்...

மோட்டார் சைக்கிள் இயங்கிக்கொண்டிருந்த நிலையில் பெற்றோல் நிரப்பியதாலேயே இம் மோட்டார் சைக்கிள் திடீரென தீப்பற்றி எரியத் தொடங்கியது. விரைந்து செயற்பட்ட மோட்டார் சைக்கிள் உரிமையாளர் மணலைத் தூவி ஒருவாறு தீயை அணைத்தார். (ச)

# தமிழக மீனவர்களின் பாதுகாப்பிற்கு அதி நவீன விரைவு ரோந்துக் கப்பல்

## 24 மணிநேரமும் சேவையில் ஈடுபடும்

(நமது நிருபர்)

தமிழக மீனவர்கள் கடற்தொழிலில் ஈடுபடும்போது அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு இந்தியக் கடற்படையினர் அதிநவீனரக கப்பல் ஒன்றை கண்காணிப்பில் ஈடுபடுத்த மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கைக் கடற்படையினால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை விடுவிக்குமாறுகோரி இராமேஸ்வரம் விசைப் படகு மீனவர்கள் கடந்த 3 நாட்களாக நடத்திவரும் வேலைநிறுத்தத்தை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலிலிருந்து சுமார் 40 கோடி இந்திய ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்ட இந்தக் கப்பல் 24 மணிநேரமும் கடலில் ரோந்துப்பணியில் ஈடுபடவுள்ளது.

தமிழக மீனவர்களுக்கு நடுக்கடலில் ஆபத்து ஏற்படும்போது அவர்கள் தகவல் அளிக்கும் அடுத்த கணத்தில் விரைந்து சென்று அவர்களுக்கு தகுந்த பாதுகாப்பை வழங்குமெனத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய அரசின் அனுமதியுடன் வழங்கப்பட்டுள்ள இந்த நவீன கப்பல் தமிழக மீனவர்களுக்கு முழுப் பாதுகாப்பையும் வழங்கும் என இராமேஸ்வர கடற்படைத் தளபதி கூறியுள்ளார். (ம)

### ஆளும் கூட்டணி அரசின்...

அத்திருத்தங்களுடன் நேற்று பாராளுமன்றத்தில் சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படுமுன், இச்சட்டமூல வாக்கெடுப்புக் பின்போது தமிழத்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் நடுநிலை வகிப்பார்கள் என்று கூட்டமைப்பு எம்.பி இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலும் சகலருக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்ட பின்னர் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலமே சட்டத்தை அமுல்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையிலேயே சட்டமூலத்திற்கு ஆதரவளித்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி ராஜித சேனாரட்ண நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டமை தொடர்பாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், சகல கட்சிகளுடனும் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து இச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமை மகிழ்ச்சிக்குரிய விடயமென்றும் தெரிவித்துள்ளதுடன், தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு ஒரு வருடத்திற்குள் அதனைப் பெற்றுக் கொடுக்க துரித செயற்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறுபான்மை அரசு ஒன்று தனது பெரும்பான்மை பலத்தை இச்சட்டமூலத்தின் ஊடாக நிரூபித்திருப்பதாகவும், எதிர்க்கட்சிகளின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து இச்சட்டமூலத்தை புத்திசாதுரியமாக ஆளும்கட்சி நிறைவேற்றியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களான சிவநேசன், கஜேந்திரன், சிவநாதன் கிஷோர் ஆகியோர் உரையாற்றினர்.

இதேவேளை, அவுஸ்ரேலியாவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்வது தொடர்பான பிரேரணை ஒன்றும் பாராளுமன்றில் கொண்டுவரப்பட்டது. இப்பிரேரணைக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவாக வாக்களித்தன. 193 வாக்குகள் இதற்குக் கிடைத்தன.

தமிழ்க் கூட்டமைப்பினர் இவ்வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் வெளிநடப்புச் செய்தனர். மேற்படி பிரேரணைக்கு எதிராக தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள் வெளிநடப்புச் செய்ததற்கான காரணம் என்னவென கூட்டமைப்பு வட்டாரங்களை வினவியபோது,

பேரினவாதக் கட்சிகள் பெரும்பான்மை இன மக்களின் நலன்களுக்காக எப்போதுமே ஒன்றுபடத் தயாராகவுள்ளன. ஆனால் தமிழர் பிரச்சினையில் மாத்திரம் ஆளுக்கு வேறு திசையில் பிரிந்துநின்று செயற்படுகின்றன. இந்நிலையில் பேரினவாதக் கட்சிகளின் நலன்களுக்கு முண்டுகொடுக்க தயாரில்லை என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

### புதிய பொலிஸ்...

யாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையிலும், இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டே கொடவை அவரது உத்தியோகபூர்வ இல்லத்திலும் சந்தித்து சிநேகபூர்வமாக கலந்துரையாடினார். இச்சந்திப்பின்போது இராணுவ பொலிஸ் அணிவகுப்பு மரியாதைகளும் இடம்பெற்றன. (ம)

### குடும்பஸ்தர்...

தர்மலிங்கம் சத்தியலிங்கம் (வயது 37) என்பவரே கொல்லப்பட்டவர் ஆவார். சம்பவதினம் இரவு 9.00 மணியளவில் இவரது வீட்டிற்கு வந்த இராணுவ சீருடை தரித்த நபர்கள் இவரை வெளியே அழைத்துச் சென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரியவந்துள்ளது.

கடந்த ஆறு தினங்களுக்குள் ஒன்பது பேர் வெலிகந்த மத்தியில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச-121)

### இசற் கோர்...

பேராசிரியர் ரஞ்சித் மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கடந்த மாதம் மூன்று வாரங்களாக மேற்கொண்டிருந்த வேலைநிறுத்தத்தினால் இப் பணிகள் தாமதமடைந்துள்ளன. இத் தாமதத்தைப் போக்குவதற்கு இரவு பகலாகப் பணிகள் நடைபெறுகின்றன.

எதிர்வரும் டிசம்பர் 10 ஆம் திகதி இசற் கோர் முடிவுகள் அறிவிக்கப்படக்கூடியதாக இருக்கும்.

பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்த மாணவர்களின் விண்ணப்பங்கள் யாவும் உதவிப் பதிவாளர் தலைமையில் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் ஆணைக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார். (ம)

### பௌத்த...

சியம் குறித்து இதுதொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு தொடர்பாகவும் கூட்டமைப்பினர் பௌத்த பீடாதிபதிகளுக்கு எடுத்துக்கூறவுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான பாராளுமன்ற உறுப்பினர்களே இச்சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர். (த-121)


## 4 ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு ✦ 30 ✦ 01 ✦ 1948

உதிர்வு ✦ 08 ✦ 10 ✦ 2000

அமரர் கந்தசாமி இராமநாதன்

(முன்னாள் உரிமையாளர் கந்தசாமி அன்சன்ஸ் நகைக்கடை, இல. 206, கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம்)

கண்காணாத் தேசத்தில் காலனின் பிடியில்
காற்றாகிப் போன அன்னாரின் ஆத்மா சாந்திக்கு
கண்ணீர்ப் பூக்களை காணிக்கை ஆக்குவோம்.

உன்பிரிவால் வாடும்
சகோதரன்

க. தர்மநாதன்
இல. 71, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

(8882)


### அரச ஊழியர்...

சபையில் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

திஸ்ஸ தெய்வேந்திர சம்பள நிர்ணய சபையின் சிபார்சிற்கு அமைய வைத்தியத்துறையினருக்கு சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஏனைய துறையினருக்கான சம்பள அதிகரிப்பில் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

இது தொடர்பாக ஆராய்வதற்கென குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக் குழுவின் சிபார்சிற்கமைய சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வுகாணப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார். (ச-121)

## வீரமணி ஐயரின் நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

மகாவித்துவான் வீரமணி ஐயரின் நினைவுப் பேருரை எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் 'அழகியல் கல்வியும் ஆளுமையும் சமூகநிலை நின்ற ஒரு நோக்கு'' எனும் தலைப்பில் பேராசிரியர் கா.சிவத்தம்பி நினைவுப் பேருரையாற்றவுள்ளார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உபஅதிபர் ஆறு.திருமுருகன் நினைவு அஞ்சலியுரை நிகழ்த்துவார். (ச)

## ஆசிரியர்தின விழா

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பிரதேசசபை நடாத்தும் முன்பள்ளி ஆசிரியர்தின விழா இன்று காலை 9 மணிக்கு பிரதேசசபை உப-அலுவலகத்தில், புங்குடுதீவு மகாவித்தியாலய ஆசிரியர் க.தேவராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (ற-126)

## எரிகாயம்

(யாழ்ப்பாணம்)

அசிற்பட்டதனால் கையெரிந்த நிலையில் நபர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த எஸ்.சாந்தகுமார் (வயது 33) என்பவரே எரிகாயங்களுக்கு உள்ளானவராவார்.

அசிற்போத்தல் தவறுதலாக உடைந்ததினாலேயே இச்சம்பவம் இடம்பெற்றது. (ச-19)

## இளைஞன் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவரை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று விடுதலை செய்தது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மயில்வாகனம் விஜயரட்ணம் என்பவரே நேற்று விடுதலை செய்யப்பட்டவராவார்.

2002 ஆம் ஆண்டு குற்றவாளியாக இனங்காணப்பட்டு பிரஸ்தாப இளைஞருக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. 1995 ஆம் ஆண்டு கட்டுமுறிப்பு என்ற இடத்தில் தாக்குதல் நடாத்தி படையினரின் உயிரிழப்புக்கு காரணமாக இருந்ததாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எனினும், இக்குற்றச்சாட்டினை நிராகரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் இவரை நேற்று விடுதலை செய்தது. (த-121)


## வேலைக்கு ஆள் தேவை

வட்டுக்கோட்டையில் இயங்கும் பிரபல அரிசி ஆலையான பாலன் மில்லுக்கு வேலைக்கு ஆள் தேவை. தகுதியுடையவர்கள் தொடர்புகொள்ளவும்.

பாலன் மில்,
வட்டு. மேற்கு,
மாவடிச்சந்திக்கருகாமை
வட்டுக்கோட்டை.

(சி-612)

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

### இரண்டாம் முறையாக க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அறிவித்தல்

2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பாடசாலையூடாக முதலாந்தடவை தோற்றிய மாணவர்கள் - இரண்டாம் முறையாக பாடசாலையூடாக 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பின் உடன் கல்லூரியுடன் தொடர்புகொண்டு,

**13.10.2004 புதன்கிழமை காலை 9.00 மணி முதல் நடைபெறும் தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.**

இப் பரீட்சைக்குத் தோற்றாத எந்தவொரு மாணவரும் பரீட்சைக்கு கல்லூரியூடாகத் தோற்றவோ, அன்றி அதிபருடாக விண்ணப்பிக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

க.இராசதுரை
அதிபர்

(சி-613)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.10.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.